உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

---

சென்னைத் திருமயிலை
ஸ்ரீ கபாலீஸ்வரரின்,

# சிவஞான பாலிய வியூகம்.

இஃது சிவநேசச்செல்வர்கள் விருப்பத்தின்படி
ஸ்ரீ சிவசமயத்திற்குத் தொண்டுபூண்டொழுகும்
அடியார்களில் ஒருவரும்
வேதாந்த சித்தாந்த சமரச சுக்ஞானவிலாச
சபாபிரசங்க கோளரியும்
சென்னைத் திருமயிலை வடகூர் இராயப்பேட்டை
அருட்கவி
இ. ஊ. பா. கங்காதர நாவலரென் றியற்பெயரமைந்துள்ள
"சிவஞானப் பாதேசியாரென்னும்"
**சிவப்ரகாச தேசிக சுவாமிகளால்**
இயற்றப்பட்டு

---

கையொப்பக்காரர்களின் நன்முயற்சியினுல் தமது
சென்னை சேத்துப்பேடு
ஸ்ரீ ஜெய விநாயக சிவப்ரகாஸ அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

---

36-வது ஷத்தின் திருப்பணியாக கலியுகாப்தம் 5016-க்குச்
சரியான இராக்ஷஸ ஷு பங்குனி மீ 5 உ
சுவாமிசந்நதியில் தேசிக சுவாமிகளால்
அரங்கேற்றஞ்செய்யப்பட்டது.
1916 ஷு மார்ச் மீ 17 உ

OFFICE OF THE REGISTRAR
21 MAR 1916
MADRAS
985
1.16
Q23:38.2111
M6
183653

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

OFFICE OF THE REGISTRAR OF
21 MAR 1916
MADRAS.

சென்னைத் திருமயிலை
ஸ்ரீ கபாலீஸ்வரரின்;

# சிவஞான பாலிய வியூகம்.

இஃது சிவநேசச்செல்வர்கள் விருப்பத்தின்படி
ஸ்ரீ சிவசமயத்திற்குத் தொண்டுபூண்டொழுகும்
அடியார்களில் ஒருவரும்
வேதாந்த சித்தாந்த சமரச சுக்ஞானவிலாச
சபாப்ரசங்க கோளரியும்
சென்னைத் திருமயிலை வடகூர் இராயப்பேட்டை
அருட்கவி
ஸி. ஊ. பா. கங்காதர நாவலரென் றியற்பெயரமைந்துள்ள
"சிவஞானப் பரதேசியாரென்னும்"
சிவப்ரகாச தேசிக சுவாமிகளால்.
இயற்றப்பட்டு

கையொப்பக்காரர்களின் நன்முயற்சியினால் தமது
சென்னை சேத்துப்பேடு
ஸ்ரீ ஜெய விநாயக சிவப்ரகாஸ அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

36-வது ௵த்தின் திருப்பணியாக கலியுகாப்தம் 5016-க்குச்
சரியான இராக்ஷஸ ௵ பங்குனி ௴ 5 ௳
சுவாமிசந்நிதியில் தேசிக சுவாமிகளால்
அரங்கேற்றஞ்செய்யப்பட்டது.
1916 ௵ மார்ச் ௴ 17 ௳

543
294.551
18653



REGISTRAR
21 MAR 1910
MADRAS.
5

உ

சிவமயம்.



திருச்சிற்றம்பலம்.

சென்னைத் திருமயிலை

ஸ்ரீ கபாலீஸ்வரரின்,

# சிவஞான பாலிய வியூகம்.

## கணேச்சுரர் துதி.

183653
Q23:38:211
N16

### பஞ்சரத்தினம்.

பன்னிருசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

அருணிறையு மன்பர்களி னிருதயம்விட் டகலாத
வைங்கரா தும்பிமுகனே
அளவிலா வுருகொண்டு வமரர்களி னிட்டர்தீர
வசுரரெனு மமணப்படைக
ளிருணிறையு மயனீக்கி யெழிலருளி யாட்கொண்ட
யிறைவனே மறைகட்பலவா
யெடுத்தோதி வாழ்த்துசொலி வணங்குமஹா பரத்வனே
யெங்குறைக ணீக்கலெளிதோ?
மருணிறையு மனப்பாச மவையகலா விடினினது
மஹிமைமலி யருந்திருவடி
வஞ்சனே னெஞ்ஞான்றி லடைவதோ வுண்மைமொழி
வசனித்த லுனதுகடனே

தெருணிறையுந் திருமயிலை ஸ்ரீகபா லீசனின்
சிவஞான பாஸியவியூகச்
செழுந்தொடைய லடியேன்சொல வருளருளும் பதஞ்சரணம்
ஸ்ரீகணேச் சுரதேவனே. (௧)

பங்கயன் ஜெழுவன்று கருணை பாலித்தனை
பார்த்தனுக் கன்புவாய்ந்தப்
பரந்தாம னென்னுங் கோவிந்தனுக் கின்பமது
பட்சமுடனே தந்தனை
துங்கமிகுந் திமெண்டர் முதலிந்திரர் கட்குநற்
றூயவர மதுவீந்தனை
துட்டகுண முற்றவசு ரர்களின்வலி யதுவொழியத்
துதியுமதி கதியுநிதியுந்
தங்கும் படிக்குநின் றிருக்கணு ளேக்கினை
சமஸ்தவுயி ருளுநின்றனை
சாந்தபதவ் யோமநிலை யெனுஞ்சுழுச் சியின்முடிவிற்
றூண்டவ மதுச்செய்தனை
திங்களொளி திருமயிலை ஸ்ரீகபா லீசனின்
சிவஞான பாஸியவியூகச்
செழுந்தொடைய லடியேன்சொல வருளருளும் பதஞ்சரணம்
ஸ்ரீகணேச் சுரதேவனே. (உ)

கனகமென வொளிதிகழு மூலாதா ரத்தினிற்
கரணமொடுங் கியவிடத்திற்
கங்குல்பக லற்றநிலை யாய்ந்தகுணப் பதவியிற்
கண்டுங் காணுதபடியிற்
சினகரம தெனவறிவு ளோங்கிய பேரின்பவழி
சேர்ந்துஞ் சேராதகலையிற்
செனனமெனு மொருதிரையிற் படராதப் படனமாய்த்
தேடி தேடாதமறையாய்
மனமெனுஉ மறியதனைப் பலிகொண்ட பரமுமாய்
வாழ்வுந்தாழ் வற்றசுகமாய்
வந்துண்மை சிந்தைகுடி கொள்ளுங் கணபதியேநின்
மலரடியின் பெருமையெளிதோ?
தினகரனே திருமயிலை ஸ்ரீகபா லீசனின்
சிவஞான பாஸியவியூகச்

செழுந்தொடைய லடியேன்சொல வருளருளும் பதஞ்சரணம்
ஸ்ரீகணேச் சுரதேவனே. (௩)

பந்தமிகு நிந்தைதரு குஞ்சனன மற்றசிவ
பருணிதர்க ளுளக்கேணியிற்
படிந்தும்படி யாததென வருவுருவ மருவமாய்ப்
பற்றிபற் றுதகிலையாய்
தொந்தமெனுஞ் சந்தையு மகந்தையொரு சிறிதுமிலா
சூட்சாதி சூட்சபதியாய்ச்
சொல்லாத சொல்லுமாய்ச் சொல்லினது முடிவுமாய்த்
சுபாசுப மிலாதஞானச்
சுந்தர வியோமமாய் மந்திரப்பிர ணவமுமாய்த்
துலங்குநின் மகிமைசிறிதோ
சுகசிவ பரமுஞ்சக மாகிநிறைச் சுமுகனே
தோத்திரஞ்செயு மெய்யன்பர்கட்
சிந்தைகொளுந் திருமயிலை ஸ்ரீகபா லீசனின்
சிவஞான பாஸியவியூகச்
செழுந்தொடைய லடியேன்சொல வருளருளும் பதஞ்சரணம்
ஸ்ரீகணேச் சுரதேவனே (௪)

ஆடியது காற்றிலலை வண்ணமன மலைவதா
லவையொருபா னின்றுன்பாத
மர்ச்சித்து வந்தனையால் கடைத்தேறக் கடைக்கண்சாய்த்
தாட்கொள்வ தென்றுவுரையாய்
பாடிநிலை நேடியுண்மைக் கூடிநாடியத் தொழும்பர்
பட்சமொரு போதுமறியாப்
பதடனெவ் வழிகண்டு வுய்குவேன் றுணையிலாப்
படிமிடியா மிடருடையுடை
நீடியத னுட்புகுந் தலக்கழித் திடநொந்த
நீசனேன் பொய்மெய்யாய்ந்த
நித்தியாப ரோட்சிதா காசனே வுலாசனே
நிதமுமடி யவர்கண்வலமாய்த்
தேடிதொழுந் திருமயிலை ஸ்ரீகபா லீசனின்
சிவஞான பாஸியவியூகச்
செழுந்தொடைய லடியேன்சொல வருளருளும் பதஞ்சரணம்
ஸ்ரீகணேச் சுரதேவனே. (௫)

—*—

## நூல்.

### பதமுணருச்சித பரமார்த்தப் பதிகம்.

வெண்சேந்துறை.

—*—

விடையெனு மால்மிசை விஞ்சையுந் தஞ்சமு
மடைந்திடு மடியவர்க் கருட்செய வருபவா
கடைவன் றுதிசொலக் கபாலீச் சுரனேநின்
கடைக்கணித் தருளெனக் கனிந்தேத்தித் தொழுதல்.

——o——

எண்சீர் - சந்தவண்ணக்கொழிப்பு.

சீர்கொண்ட புரா தனனேசிற் பரனே
சிவனே ஹரனே திருமால் விடையா
திரிபுராந் தகனே தினகரோ தயனே
தீனர் கள்தயா பரனேவைம் முகனே
நீர்கொண் ட சடா தரனே வேணியனே
நித்தியனே சத்தியம் வழா வுத்தமர்க
ணிணைவாம் நிலைவிட் டகலாப் பருணித
நிதியே மதிசூழ் நிமலா விமலா
பேர்கொண்ட பல வடிவாய் முடிவுகொள்
பெம்மா னெம்மா னெனவரு மிறையே
பிறவா யிறவா நெறியே யுறுவான்
பிறையே மறையே யிறையே துரையே
கார்கொண் ட வினைக் கடந்தே தொடர்ந்துட்
கண்ணு னவருணுங் கனியே கற்பகத்தாய்க்
கயிலா யமெனு மயிலா புரிஸ்ரீ
கபாலீச் சுரனேநின் கடைக்கணித் தருளே. (௧)

அருளா ளர்களுள நடம்புரி பவனே
அமலா கமலா சனனோ டியர்மா
லவனும் பணிகொண் டருள்பெற் றனெனி
லடியேன் மிடியே யுடையேன் கொடிய
னிருளாம் நரக நிகருல கமயலி
விழிவேன் கதியெ னுரையா யரனே

எனைநே ரொருவ ரிலையென் பதுவுண்மை
யெனினுங் கைவிட் டிடனல் லததோ ?
பெருமா னெனசந் ததம்வந் தனைச்செயும்
பெரியோ ருரியா ரெனவேதஞ் சொலும்
பீழை யெனூஉ மூழை வலியினுற்
பின்மு னறியா துழன்றேன் சிறியேன்
கருணா கரனே கண்கள்மூன் றுடையக்
கடவுளே யடியேன் மிடியைப் பொடிசெய்
கயிலா யமெனு மயிலா புரிஸ்ரீ
கபாலீச் சுரனே கடைக்கணித் தருளே. (உ)

அண்டர்ப் புகழா னந்தமெய்ச் சுகமே
ஷகண்டித வடிவே வஷ்டலட் சணனே
அன்பே யன்பரு ளமர்ந்திடு மதீத
ஷண்ணலே நினையன் றிதுணை யெவர்கொல்?
பண்டை வினைதனை யண்டா தநல்லோர்ப்
பாடித் தொழுவா ரழுவார் மழுமான்
படையா யுமைகூ றுடையாய் விடையாய்
பரனே ஹரனே சரண மெனவே
தொண்ட ரெனப்பேர் கொண்டா ரவர்கழற்
றொல்லை யுடையேனெங் ஙனங்கண் டடைவேன்
துரியாஸ் ரயமே சுழிநேத் திரமே
தொந்த மெனும்பந் தமிலாஸ் வயம்பே
கண்டார் மகிழ்காட் சியேசாட் சியமே
கருதார்க் களிநல்கி டாக்ஸர்த் தவ்யமே
கயிலா யமெனு மயிலா புரிஸ்ரீ
கபாலீச் சுரனே கடைக்கணித் தருளே. (௩)

எங்கும் பரமாய்த் தங்கும் ஹரனே
யெழினேர் விழியார்ப் பழியா லழியா
ரெனுநான் முறையைச் சிறியேன் றெரியே
னெவ்வா றுனதுப் பதச்சீ ருணர்வேன்
மங்கா வொளியே யளியே வெளியே
மன்னுஞ் சருவா பரணா கிரணா
மலரே மலருண் மணமே குணமே
மதியே கதியே நிதியே பதியே

தங்கா தெனேவந் தடுத்தே கெடுக்குஞ்
சனியன் றனைதீர்த் தருளிற் பிறவேன்
சதசத் தெனுந்தத் வமசிப் பதமார்த்
தமதிற் றிகழ்சத் வகுணற் புதமே
கங்கா தரனே அரவோம் சிவசிவ
காலன் றனையுதைத் தமஹா றுபவா
கயிலா யமெனு மயிலா புரிஸ்ரீ
கபாலீச் சுரனே கடைக்கணித் தருளே. (௪)

பாதம் பணிவா ரணிவார்த் திருநீறைப்
பதிநீ யெனதின முணர்வா ருணர்வுட்
பசைவந் தணுகாப் படிசத் தியநெறிப்
பற்றுஞ் சுகமே சுகமாய் நினைவர்
ஏத நிறைந்த யெளியனு நின்று
ளெவ்வா றடைவே னெவருண்மை சொல்வா
ரெந்தா யுனைநே ருலகிற் றுணையா
ரெல்லாந் தெரிந்துந் தயையென் பாலிலை
வேதம் பலவாய் விளம்பும் விளம்பினு
விஞ்சை யடைந்திடி னுபசாந்த முறும்
விதியின் னதென மதிதந் திடினே
விழைவே னழியா வழியு னுழைவேன்
காதன் மிகுதொண் டர்களண் டிதொழக்
கருணைத் தரமால் விடைமேன் வருவோய்க்
கயிலாய மெனு மயிலா புரிஸ்ரீ
கபாலீச் சுரனேகடைக்கணித் தருளே. (ரு)

சனன மெனும்பா வியினல் மிகுநோந்
தனனே யறிவாய் மறைவோ திரையோ?
சகஸ்ற்று பரனு சதசத் வதனு
சமயோ ஜிதக்ருபா கரநிரா தரனே
அனற்சூழ் மழுவேந் துபவா நமவோம்
அரஹர சிவய நமவென வோதி
அன்பார்ந் திநெற் றுதியா னிறையு
மடியா ருளமே குடியாய் நடிப்பாய்
இனமுன் விழிசாய்த் தருளா விடினே
யெங்ஙன் பிழைப்பே னிறைவா யுரையாய்

எல்லா நினது செயலும் பொருளென்
றெந்நா ளுணர்வே னந்நா னலமே
கனகாம் பரனே கமலா சனனைக்
கடிந்தே சிரமே கரங்கொண் டவனே
கயிலா யமெனு மயிலா புரிஸ்ரீ
கபாலீச் சுரனே கடைக்கணித் தருளே. (சு)

சல்லாப மலிச் சகடை யுடையைத்
தரித்தே வெறித்தே யிளைத்தே களைத்தேன்
தந்த மிடியினு ஞெந்தே சிதைந்தேன்
சருவமுந் தெரிந்த சந்திர சேகரனே
வல்லாண் மைக்கொளு மனப்பேய் வழியான்
மடியாப் படிநீ யடிமைக் கொளுவாய்
மாசற் றநெறியின் றேசுற்ற சிவமே
மலையான் மகளுமைக் களிக்கும் வடிவே
கொல்லா மற்கொலும் பொல்லாச் செயலாற்
கொலையுண் டனனே நிலைகொண் டிலனே
குருவே குருவா யுருவந் தவனே
குணமே தெரிந்தமெய்க் கோவே தேவே
கல்லா தவனு னெனினுமு னடியார்க்
கழல்போற் றிடும்புண் யமெனக் கருள்வாய்
கயிலா யமெனு மயிலா புரிஸ்ரீ
கபாலீச் சுரனே கடைக்கணித் தருளே. (எ)

இனியே னுமுன தளியா லெளியே
னிதமுற் றுநல பதம்பெற் றிடவே
யிதங்குந் தயவாய்க் கயவன் றுயர
மெரியாற் படுபஞ் செனச்செய் புகழே
பனிபோ னினதார் வகதி ரவனும்
பருதி யருள்பட் டிடினேய்ப் பறக்கும்
பயனென் றடைவே னடியேன் மிடியேன்
பத்தர்ப் பணிகொ ளுத்தமனே சிவனே
அனியா யமெனும் படுபா வியினு
லந்தோ? வந்தோ யடியேன் படிமே
லாராத் துயரா மாற்றின் சேற்றி
லழிந்தே நாள்வீணுய்க் கழிந்தே யழுதேன்

கனியாய் கனியுட் சுவையாய் நிறைந்தவுன்
  கண்முன் மறைவா மெனிலாச் சர்யமே
    கயிலாய மெனு மயிலா புரிஸ்ரீ
      கபாலீச் சுரனே கடைக்கணித் தருளே. (அ)

அஞ்சா தப்பய லெனுமை வர்களா
  லசடுத் தலையாட் டியூழ்நாட் டினனே
    அருளான் மணக்கும் பெரும்பே றுடையா
      ரவரே பெரியோ ரகலார்ப் பதமே
செஞ்சே வடியதைத் தேடும் வரமே
  திகழாய் தயைசெய் திடின்ன் மையதே
    தேனூர்க் கொன்றைச் சடையுஞ் சசியுந்
      தெளிகங் கையுந்தங் கிடுஞ்சங் கரனே
பஞ்சாக் கரமே தினமோதித் தொழும்
  பணியும் பணிநே ரடியா ருறவும்
    பலித்தாற் பிழைப்பே னிலையேற் பிழையேன்
      பரனே யிதினுண் மைதெரிந் ததுவே
கஞ்சன் சிரமேந் திவலம் வருகுங்
  கருணு கரனே கனகவம் பலனே
    கயிலா யமெனு மயிலா புரிஸ்ரீ
      கபாலீச் சுரனே கடைக்கணித் தருளே. (௯)

அமரர்ப் பரவி யருகே தொழும்புகொண்
  டருளே யணுக பெருவாழ் வடைந்த
    வதிபோ கமெலாஞ் சொலு மாகமமே
      யணுவு முணரே னுணர்ந்தென் பயனே
நமன்போ விடரே மலிபுன் மனத்தா
  னுயாய்ப் பேயாய் வோயா தலைந்தேன்
    நலமோ ? புலனேய்ந் தொருபா லுறங்கி
      னுடா தொடுங்குமும் மலமா னதுவே
விமலி யுமைபார் வதிகற் பகத்தாய்
  விரும்ப சிவலிங் கமென வமர்ந்த
    வித்தே சருவாதி சத்தேபுத் தமிழ்தே
      விற்பன ருற்பவ கற்பனைக் கடலே
கமழு மலர்ப்பூம் பதமே தருகுங்
  கனலே கருதருங் கங்கை வேணியனே

கயிலா யமெனு மயிலா புரிஸ்ரீ
கபாலீச் சுரனே கடைக்கணித் தருளே. (௧௦)

அண்ண லெனவந் தடியார் கடமை
யடிமைக் கொளுமைம் முகசுந் தரமே
அதிவி தரண முளவாப் தர்தொழு
தகலா கிலைசூழ் வரமே தருவோய்
எண்ணம் பலவா யினுமொன் றுஞ்செய
வியலா ததுவுண் மையுஞ்சான் றதுவா
மிறுதி வரையிற் றுணைநின் பதமன்
றியிலைத் தெரிவா யெனதுள் ளமதே
பண்ணுந் தொழிலற் படுமோ கினுருப்
பலித முறினேன் பதுசித் தியதே
பறையாப் பறையே பரமாத் புதமே
பணிவார்ப் பணியின் பணியே மணியே
கண்ணுங் கருத்தா யுருகொண் டிலகுங்
கருணீ கபரத் துவசூட் சியமே
கயிலா யமெனு மயிலா புரிஸ்ரீ
கபாலீச் சுரனே கடைக்கணித் தருளே. (௧௧)

---

## விண்ணப்பமான விருப்புயர்மாலை.

### வெண்செந்துறை.

பூண்ட செனனநோய்ப் பொருந்திடு வாதனை
யீண்டு யீண்டுசெ யின்னலாங் கொன்னலைத்
தாண்டி தனிநிலைச் சார்ந்தன்பு கூர்ந்திட
வேண்டும் படிசதா விரும்பி யேத்துதல்.

---

### எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

ஆனந்தப் பரஞ்சுடரை யமல வாழ்வை
யளவிலாப் பலவுருவா யடியர் முன்னந்
தானந்தவந் தருமவழிப் படி யுதித்த
சங்கரனை சத்துசித்தா னந்த தேவை
மோனமலி முத்தருரை முதல்வன் றன்னை
முடிவிலா தனிப்பொருளை ஞான வாழ்வை

வானவர்கள் வணங்குங்கபா லீசன் றாள்
வாழ்த்துவோஞ் சனனவினை வீழ்த்து வோமே. (க)

அானாவோம் சிவயநம வெனநற் பூசை
யாற்றுநல்லோ ருள்ளமதி லமர்ந்து நட்டம்
வரம்பெருகச் செய்வானை வாழார் தம்மை
வாழ்விக்க கண்சாய்க்கும் வள்ள டன்னைக்
கரமதனி லயன்கபால மேந்தி ஞானக்
கண்கள்மூன் றுடையானைக் கன்ம நீங்க
சிரஞ்சாய்த்துக் கரங்கூப்பி கபாலீசன் றட்
சேவிப்போ முண்மைநிலைப் பாவிப் போமே. (உ)

சிற்பரத்தை மகத்வமெலாஞ் செய்து ளானைத்
தினகரனை செங்கண்மால் விடையான் றன்னை
தற்பரத்தை தயாபரத்தை சமஸ்த ரூபந்
தாங்கியதன் றன்மைவண்மைத் தழைத்து ளானை
உற்பவமுங் கற்பனையு மொன்று மில்லா
வோங்கார வரிவடிவி லொளித்தான் றன்னைப்
புற்குரம்பை யழியாமுன் கபாலீசன் றட்
போற்றுவோ மவன்புகழைச் சாற்று வோமே. (ங)

ஓதாம லோதுகின்ற வுணர்வின் வித்தா
யுண்மையுள்ளோ ருள்ளபடி கண்டு யேத்தி
பூதாதிப் பொறிபுலன்செய் புன்மை நீங்கிப்
பொய்யகன்றுப் புத்தமிழ்தைப் பருகி னோர்க்கு
வேதாந்த வொடுக்கமாஞ் சித்தாந்தத் துள்ளே
விளையாடும் பரத்துவனை வேண்டி போற்று
நாதாந்த மணியெனுங் கபாலீ சன்ற
ணண்ணுவோ மெஞ்ஞான்றுந்துதி பண்ணு வோமே. (ச)

எள்ளினுள்ளே தயிலமென யிருந்துள் ளானை
யெல்லாமா யல்லவுமா யியாவு மானத்
தெள்ளியநல் லறிவினினற் றீப மாகித்
தீண்டாதத் திருமேனிச் செல்வந் தன்னை
உள்ளியெனப் பாசம்விடா துலுத்த நெஞ்சி
லொருபோதுந் தங்காத வும்பன் றன்னை
வள்ளலென்ன வருடருகுங் கபாலீ சன்றள்
வணங்குவோ மவனன்பர்க்கே யிணங்கு வோமே. (ரு)

ஆற்றாத வினையைப்பொடி யாக்கு வானை
யைம்புலனை யடக்கியபோ தறிவான் றன்னைச்
சேற்றாலே கட்டியமண் கோட்டை தன்னுட்
செறிந்தமாயப் பேய்சிரத்தைக் கொய்து ளார்பால்
கூற்றாலே வருமிடியைத் தொலைத்து வாட்கொள்
குணமணியை மரகதத்தைக் கும்பிட் டேத்திப்
போற்றார்க ளுணர்வருங் கபாலீ சன்றட்
புகழுவோ மவனருளாற் றிகழ்வோ மியாமே. (௬)

சத்தான தின்னதெனத் தெரிய வேண்டி
சற்குரு தீட்சைகட்பெற்றுச் சமய நேர்மை
யெத்ததியு மறவாது வுழைத்தோர் பின்னே
யேகாந்த வுருகரந்து நின்றாள் ளானைச்
சித்தாதி மூலர்பல தேவ தேவர்
சித்தமொன்றாய் நின்றுதின்றச் செங் கரும்பை
உத்தமனை வுயர்வைமா கபாலீ சன்ற
வோதுவோம் வினையற வெப்போது நாமே. (௭)

செழுமறைகட் பலவடிவாய்ச் செப்ப நின்ற
தேவனை தேவாதிபருட் சிறந்து ளானைப்
பழுத்தமனப் பத்தர்சதாப் பாடு வோனைப்
பாட்டினுளே வுள்ளபடிப் படிந்தான் றன்னை
இழுக்குடையச் செயலகன்றார்க் கின்றி மற்றோ
ரென்சொலினு மவையுணில்லா யிறைவன் றன்னை
மழுக்கரத்த னுமைபாகன் கபாலீ சன்றள்
வருந்துவோந் தவநெறியிற் பொருந்து வோமே. (அ)

காணுகின்ற மறைவழியிற் கலந்துள் ளானைக்
காரணனைப் பூரணனைக் கருணை மிக்கத்
தாணுவா யுயிரனைத்துந் தாங்கு வானை
சமஸ்தசீவ ரட்சகனைத் தற் பரத்தை
ஆணுவங்கா மியமாயை யகன்று ளோர்க்கு
வறம்பொரு ளின்பம்வீடா யமர்ந்துள் ளானை
வேணுமென்ற வரந்தருங் கபாலீ சன்றள்
வேண்டுவோம் வினைக்கடலைத் தாண்டு வோமே. (௯)

சிந்தையறிந் துதவுகின்ற செக்கர் வேணி
திரிபுரத்தை நகைத்தெரித்த தேவ தேவன்

தீக்ஷையுடை தனையணியா தறிவுகொண்டு
    நித்தியாப ரோட்சிதமாய் நிறைந்து ளார்கட்
பந்தமதை நீக்கியருட் பாலிப் பானைப்
    பழஞ்சுடரைப் பரம்பொருளைப் பண்பு ளோனை
வந்தனஞ்செய் பவர்க்கருள் கபாலீ சன்றாள்
    வாஞ்சிப்போம் வரும்வினைவாய்க் காஞ்சிப் போமே. (௧௦)

சகளமே னியனைச்சதா சிவனை ஞானச்
    சந்திரசே கரனைக்கூற் றைத் தடுப்பான் றன்னை
யிகபர மிரண்டினுக்கு முதவு வானை
    யெவ்வணமாய் நினைப்பவர்க்கவ் வண மானானை
சுகதுக்க மிவைகளற்ற நெஞ்சிற் குள்ளுங்
    தூங்காமற் றூங்குமிடந் தனிலு முள்ள
பகலவனைப் பருணிதனைக் கபாலீ சன்றாட்
    பாடுவோ மவனன்பர்பால் நாடுவோமே. (௧௧)

செஞ்சிலம்பி னொலிகேட்டு சேவித் தாரைச்
    சேர்த்தணைத்து யெடுத்துஞானப் பாலை யூட்டிக்
கொஞ்சுமொழிக் குகந்துவர மளித்தான் றன்னைக்
    கூடாரைக் கூட்டிவைக்குங் கோவை தேவை
மஞ்சுருவா யுமைமயிலாய் வடிவங் கொண்டு
    வணங்கிதொழ சிவலிங்க வுருவா னானை
அஞ்சுமொன்றா யடங்கியே கபாலீ சன்றா
    ளர்ச்சிப்போந் தொழாரைக்கண்டாற் கர்ச்சிப் போமே.

சாதிகுல நாமரூப சமயா சாரஞ்
    சனனமர ணமும்வினையுந் தொந்த பந்த
மோதிவரும் பலதன்ம கன்ம துன்ப
    மொன்றுமிலா னன்பர்கட்கு யின்ப நல்கி
பீதியெனு மூழகற்ற வுருக் கரந்த
    பெம்மானைப் பெருமானைப் பெரியோன் றன்னை
நீதிபடி நெறியுடன் கபாலீ சன்றா
    னேசிப்போந் துதிமலராற் பூசிப் போமே. (௧௩)

அண்டபிண்ட மியாவினுளு மமர்ந்துக் கார்த்த
    வப்பனையொப் பில்லானை யாரா தாரக்
தண்டகண்ட நீலகண்ட சசிய கண்டக்
    கருத்தனைக் கருத்தினுள்ளே கர்த்தா வாகிக்

கொண்டபல கோலமாங் குணத்தின் குன்றைக்
குற்றமற்ற நல்லவர்க்கொண் டாடு வானைப்
பண்டைவினை தனைநீக்குங் கபாலீ சன்றட்
பணிகுவோந் திருவெண்ணீ றணிகு வோமே. (௧௪)

தேடரியப் பரம்பொருளை தெய்வ வாழ்வை
தினகரோ தயஞான மணி விளக்கை
நாடரிய நாட்டமதை நம்பன் றன்னை
நம்பினவர்த் தாரகத்தை நவிஞன் மாடற்
கூடத்தி லறுபத்துநான் கெனநற் கோலங்
கொண்டசோம சுந்தரனைப் பவர்க் கெல்லுங்
கோடசியை நாதவித்தை கபாலீ சன்றட்
கூடுவோம்பற் றில்லாரைவிட் டோடு வோமே. (௧௫)

சத்தியமுஞ் சாந்தமுயர் ஞான வித்தை
சங்கற்ப மற்றசிதா காசந் தன்னை
பத்தியெனும் புட்பமதைச் சாத்தி யேத்திப்
பணிபவர்க டுயரகற்றிப் பாது காக்குஞ்
சித்திமலி பரவடிவைச் செழுந்தே னுகத்
தித்திக்குந் தீங்கனியைத் தீமை யற்ற
புத்திக்கு ணடஞ்செய்கபா லீசன் றட்தட்
பூட்டுவோஞ் சமயவுண்மை நாட்டு வோமே. (௧௬)

சங்காரக் கர்த்தனைமெய் சடத்தி னைத்
தானென்னு மாணவப்பேய்த் தலை நசுக்கி
மங்காத வாழ்வருளு மாணிக் கத்தை
மறைகளெலா மோதநின்ற வாச்சல் யத்தை
திங்களென யெங்குநிறை சிவ பிரானைச்
செக்கர் வேணியனையைம் முகனை தேவை
செங்கரத்தில் மழுமான்கொள் கபாலீ சன்ற
டேடுவோ மெஞ்ஞான் றும்பாடி யாடு வோமே. (௧௭)

எல்லையிலாப் பழம்பொருளை யின்ப துன்ப
மென்பதிலா சர்க்குணர்பா லிலகு வானைச்
செல்வமதிற் சிவஞானச் செல்வ மன்னுந்
தேகமெனுஞ் சிதம்பரத்துட் சிறந்து ளானை
வல்லானை வல்லவனை வலிமை யெல்லாம்
வகுத்தானைத் தொகுத்தானை மாற்றில் லானை

சொல்லானை சொல்முடிவை கபாலீ சன்றாட்
சூழ்குவோந் தொண்டரைக்கண்டால் தாழ்கு வோமே.

பேசாத மௌனமதைப் பேரின் பத்தைப்
பெரிதுணர்ந்தா ருளநைந்துக் கண்ணீர் சோர
நேசானு சர்ரியராய் நிட்டை தன்னி
னிசரூபங் கண்டுதொழு திறைஞ்சி நிற்குந்
தேசுயரு முண்மைசிவா னந்த தேவைத்
திரிபுரமா முக்குணத்தைச் சிதைத்தான் றன்னைப்
பாசமற்றோ ருறையிடமாங் கபாலீ சன்றாட்
பற்றுவோ மன்பில்லாரை யகற்று வோமே. (௧௯)

எண்ணரிய சுகுணத்தை யிமையோர் ஞான்று
மினியதென வுண்டுவினை மாற்ற நின்றக்
கண்ணுதலை யஞ்ஞானக் கரி யுரித்துக்
கனமாய வழியடைத்துக் காதன் மிஞ்சிப்
பண்ணிசைத்தா னந்தநிலைப் பற்றி னோர்க்குட்
பலிதமுறு சிவஞானப் பிழம்பை வல்லத்
திண்ணியனைப் பகரொணுக் கபாலீ சன்றாட்
சிந்திப்போமன் பருடன்சதா வந்திப் போமே. (௨௦)

கருணைநிறைப் பாக்கியத்தை யகக்கண் ணாலே
கண்டுகொண்டுள் விண்டுதொண்டு கனிந்துச் செய்து
மருளகன்று நெறியுமன்பு வாய்ந்த மேலோர்
மலரடிவிட் டகன்றதிலை யெனச்சொல் வேதப்
பொருளுணர்ந்தவ் வழிநின்றோ ருன்னி யுன்னிப்
பொய்நீத்து மெய்நிலையுட் பொருந்தினோர் காண்
டிருவருளே வொருவுரு கபாலீ சன்றாட்
சேருவோம்வந் தணைவினைக டரு வோமே. (௨௧)

அன்பும்பொரு ளருண்வாய்மை யடக்கம் பக்தி
யவைகளுள தெனும்பலநூ லாய்ந்தன் னேர்மை
நன்மையுட னடைந்தனர் நல்லோர்க ளென்று
நவின்றவ்வழி நீங்குவோரு ணுடான் றன்னைக்
கன்மதன்ம மிரண்டுமற்றுக் களங்க முள்ளக்
கரணபிலுக் கதுநீங்கக் கசிந்து யேத்தி
புன்மையற வாந்தருங் கபாலீ சன்சீர்ப்
புகலுவோஞ்சந் ததந்துதியால் மகிழு வோமே. (௨௨)

சிதம்பரமாந் தேகத்துளே சிவப்ர காச
சீவான்ம பூததத்வ கரண மாக
யிதமிருநற் கடவுளருண் டென்றஞ் சாது
யெழிலகன்றுட் புகுந்தனைத்து மிதக்க மின்றிப்
பதம்பார்த்து யேமனவன் களவுச் செய்து
பழியடைந்தா னெனநல்லோர்ப் பற்றற் றென்றுஞ்
சதமாக நிதந்தொழு கபாலீ சன்றுட்
சந்ததமும் பந்தமற வந்திப் போமே. (௨௩)

எத்தவத்தோ ரெக்கலையோ ரெல்லா மண்ணு
ளேற்றபடி மறைந்ததன்றி யெங்கே போனு
ரத்தவமு மக்கலையு முள்ள வண்ண
மறிந்தவரே வுண்மைசொல்ல வயர்ந்தா ரென்றூர்
உத்தமமு மத்திபமு மதம மூன்று
மூசையனு பவமுரைக்கு முள வறிந்துச்
சித்தமொன்றுய் நின்றபடி கபாலீ சன்றுட்
சேவிப்போஞ் சிவஞானம் பாவிப் போமே. (௨௪)

மெய்பொய்யின் மினுக்கெங்கே? வேத சாத்திர
வேந்தரெங்கே ? சாந்தருண விமல ரெங்கே ?
செய்கையுஞ் சிந்தையுமொன்றுய்த் தேர்ந்தோ ரெங்கே ?
செயலற்றுே ரிடத்தில்தவஞ் செய்வோ ரெங்கே?
வையகமும் வான்மழையுஞ் செய்த நன்றி
மறந்துயிறந் திடும்பாவப் போர்வை நீக்கி
வுய்வழிகண் டன்புடன் கபாலீ சன்ற
ளூறவுகொள்வோ மறமறுஞ்சீ ருணர்வோ மியாமே. ()

தலைமைபெறு சனனமதை யெடுத்த தல்லான்
சாக்காடு தனைச்செயிக்கு முறைமைக் காணும்
கொலைதினமுங் கோடிகோடி யாகத் தன்றன்
குணத்திடத்தே பிறாகுசெய்து குலைற மிகுந்தோம்
இலைபொன்போய் மறுத்துரைப்போம் ஞானஞ்சொல்வோ
மிந்திரியப் புலாலையுண்டு யேப்ப மிட்டோஞ்
சிலைப்போல சிந்தைநின்றுக் கபாலீ சன்றள்
தினகரன்போ லுளத்திலோங்க சிறந்துய் வோமே (௨௬)

சனகனு தியர்நால்வர் சமய நாதர்
சாற்றுந்திருத் தொகையடியார் சமஸ்த சீவ

சினத்தோடினஞ் சேருவபோ லெழில்க டங்க
வென்ஞான்று மொருங்குடனே நீங்காத் தன்மை
மனத்துளெழ வாழ்த்திசிரம் வணங்கி யேத்த
மாலெனுநந் தியின்மேல்வரு மமலன் றன்னைக்
கனகமுங் கற்பகமாகுங் கபாலீ சன்றாட்
கலக்கும்வழி யுணர்ந்துநிலைக் காணு வோமே. (௨௭)

எக்கலையு மெத்தவமு மெவ் வெவர்க்கு
மிசைந்தபடி யிருந்ததனு லன்றோ வன்னோ
ரக்கருத்தை யவ்வடிவை யளவுக் கெட்டா
வகண்டபரி பூரணத்தி னருளைக் கொண்டு
தக்கது தகாதிதுவென் றெழுதி வைத்தச்
சத்தியத்தை யறிந்துநின்றோர் தலை யெடுத்தார்
மூக்குணமொன் றாகியே கபாலீ சன்றாட்
முத்திபெற பத்திசெய்வோ முறைமை யாமே. (௨௮)

வந்தவிதிப் படியுதித்து மனுக்க ளெல்லாம்
வாய்மடுத்துண் டேப்பமிட்டு மண்ணுட் பூந்தா
ரிந்தவழிச் சென்றனரென் றெடுத்துச் சொலவா
ரெவருமின்றி மாயப்பெண் கண்ணை மூட
வந்தமதிக் காளாகி முப்பேய் தன்னு
லரசாண்டு வழிந்துடல்விட் டுயிர்ப்போ முன்னம்
பந்தமற்றுச் சுகம்பெறக் கபாலீ சன்றாட்
பற்றிகொள்வோம் வரும்வினைக ளற்றுப் போமே. (௨௯)

அளகேச னிகரிருந்தோ ரெல்லா மெங்கே?
அவையிலா யேழைகளெங்கே? சிவன் றன்னைக்
களவுசெயுஞ் சண்டனெங்கே? கற்றோ ரற்றோர்
கனசுறற ஞானிய ரஞ்ஞானி யெங்கே?
தளதளென மினுக்குகாட்டும் பழம்போலக் கை
சாய்ந்தயிடஞ் சாய்ந்தோய்ந்து வழியு மோச
வுளவறிந்து நலந்தருங் கபாலீ சன்றாட்
குண்ணகொடுத் தவன்பணிசே ரெண்ணு வோமே. (௩0)

கண்கட்டு வித்தையெனுந் தந்திர சாலக்
கபடநா டகமதனிற் கைதேர்ந் தையோ!
பண்கட்டு முறைப்படி நில்லா திழிந்துப்
பாவவழிக் காளாகிப் பதைப் பதைத்து

மண்கட்டு சோறூட்டி வளர்த்த தெல்லாம்
மாற்றுன்மு னில்லாதென் றன்பு செய்து
விண்கட்டு முத்திதரும் கபாலீ சன்றாள்
வீழ்ந்துதுதி வினைகளியாவு மோய்ந்துப் போமே. (௰௧)

தாய்த்தந்தைச் சுற்றமனை மக்கள் மித்திரர்
தனகனபூஸ் திதிக்ஷேமம்வீ டாடு மாடு
நோய்வறுமை கலைஞானுஞ் ஞான முத்தி
நுண்ணறிவி லிவைகளெலா மாய்ந்து பார்த்து
நாய்நரியுங் கழுகுமண்ணு நமனு லுண்ண
நடுநிலையென் றொழித்துநல்லோர் தவங்கைக்கொண்டார்
வாய்மொழியிங் கடங்குமுன் கபாலீ சன்றாள்
வலம்வந்து போற்றிசதா நலங்கொள் வோமே. (௰௨)

மணிதாளம் பூரிடம ரகமுஞ் சங்கு
வளைசேம கலந்தட்டு வாச கிண்ணம்
தணிவொளி விளங்குந்தூண்டா விளக்க தாகுந்
தத்துவந்தொண் ணூற்றூறுந் தங்குந் தேகத்
திணிவுறு மாலயத்துள்வாழ் சீவ நாதந்
திகழ்முன்னோர் வத்துவெலாங் களவுச் செய்த
வணிசேர்கூற் றனையுதைத்த கபாலீ சன்று
ளாண்டபடி யாண்டவனை வேண்டு வோமே. (௰௩)

தள்ளுண்ட ஸ்தூலமென்போஞ் சமஸ்து மண்ணு
டான்விளைவ துண்டுபின்னே தகன மாவோம்
கள்ளுண்டக் குரங்கதைப்போல் மயங்கி வீழ்ந்து
காலம்வரு வரையினும்பொய்க் கதை படிப்போம்
எள்ளுண்ட வெண்ணெயென விருத யத்து
ளெம்பிரானுண் டறிந்தவர்க்கு வாய்பேச் சுண்டோ?
வள்ளலென விடையேறுங் கபாலீ சன்றாள்
மதிதுதியுங் கதிபெறயாம் வணங்கு வோமே. (௰௪)

சொந்தமு மன்னியமென்னு மிரண்டுங் கூடி
தொந்தபந்த முண்டாக்கி சமீபந் தூரச்
சிந்தையதாய் நடத்தினவை கண்முன் றோன்ற
செகமறியா தெனப்பூனைப் பாலை யுண்ணும்
விந்தையெனு மேற்பூச்சிற் பயனுண் டாமோ?
விளக்கிருக்க கிணற்றில்விழும் விதியி தாமல்

வந்தவூழ் வினைமாற்றுங் கபாலீ சன்றாள்
மன்னுபுக ழன்புசொலி வாழ்த்து வோமே. (௩௫)

தனக்கொருதீங் கொருவர்செயின் றடித் தெழும்புஞ்
சண்டாளப் பேய்க்குணத்தால் மற்ற வர்க்கு
யினதினதென் றெண்ணிடவே நேர மின்றி
யெதிருக்தம் பேசிபலத் துன்பஞ் செய்து
வனத்தினிற்காய்ந் திடுநிலா வாழ்க்கை தன்னுண்
மகிழ்ந்திருந்தா லிறுதியினில் மண்தா னேம
னினைப்பொழிய வரந்தருங் கபாலீ சன்ற
ணேசிப்போ மவன்புகழை யாசிப் போமே. (௩௬)

கோடிவித்தைப் படித்தாலு மெழுதி னாலுங்
குணநன்மை யடைந்திலையேற் பயனுங் குண்டோ?
தேடிவைக்கும் பொருட்களெலாம் பிறர்க்கே யாகுந்
தின்றுகுடித் துடுத்தினதே தனதா மின்ப
வீடிசைக்கு மறம்பொருளே விஞ்சை நல்கும்
வித்தில்லா விளைவிலையால் விபரங் கண்டு
மாடசைய நடம்புரி கபாலீ சன்றாள்
வருந்துவோ மன்பர்க்கேண்மைப் பொருந்து வோமே.

உடலளவை யெடுத்துணரி லொன்றே யல்லா
லுப்புசப்பில் லாவோர்சொல்லா லுவகை யாக்கித்
தடவரைபோற் சாதியெனு மாபா சத்தைச்
சாற்றுவரியா ரேற்பவரியார் சைவந் தன்னுட்
கடவுட்பர சிவனொருவ ரியாவ ருள்ளுங்
கருதரிய சீவனென்றார்க் கடந்தோ ரெல்லாம்
சுடலைப்போ யடங்முன் கபாலீ சன்ற
டுணைக்கொண்டு போற்றிமுத்தி சூழ்வோ மியாமே. (௩௮)

எப்பொருளு மீசனென வெண்ணி முன்னோ
ரேதகுண மற்றொருங்கே யிருந்து வாழ்ந்தா
ரப்பப்பா யிதையெவரோ மறுக்க வல்லா
ராயினுமோர் கால்மறுப்பா ரவர் சுகிக்க
செப்பரிய சனனமிது சிவ பிரானித்
தேகிகளைத் தன்மயமாய்ச் சிறக்க வைத்தா
ரொப்புவமை யென்பதிலா கபாலீ சன்ற
ளூழ்வினைகட் போகசதாத் தாழ்குவோமே. (௩௧)

தூங்காமற் றூங்கியுங் காணுமற் கண்டுஞ்
சுகியாமற் சுகித்து கடவா கடந்து
நீங்காம னீங்கி நினையா நினைத்து
நிலைபெற வுண்ணுமலுண்டு நித்தியக் கேழ்வி
பாங்குறக் கேளாமற்கேட்டுப் பதி ஞானப்பால்
பருகிதிரு விளையாட்டை யுலகோ டெய்யத்
தீங்கனிப்போ டித்திக்குங் கபாலீ சன்றாட்
சிந்திப்போம் சிந்திக்கிலூழ் வெந்துப் போமே. (௨0)

கோடிகோடி யாய்ச்செயுந் தன்மமுந் தவங்கட்
குறையொன்றி லுலழிங் குணமாங் கில்லை
ஆடிபாடி யலண்டுபூதக் கரண மெல்லா
மதன தன் வலியொடுங்கி யடங்கப் பார்த்துங்
கூடிகூடி கெடுக்கும்பூர்வ கன்ம பாவக்
கூற்றனுக்கோர் வந்தனஞ்செய் தகன்று முத்தி
தேடிநாடு மன்பர்புகழ் கபாலீ சன்றள்
திறமுணர்ந்து வரம்பெறவே சரண்கொள் வோமே. (௨௧)

கூட்டுறவா யாக்கையுள்ளே தத்வ வர்க்கங்
கொள்ளைக்கொண்டு சள்ளையிலே தள்ளிக் கொல்ல
நாட்டுகின்றேம் பொய்வெளியில் வேடங் காட்டி
கடிக்கின்றே மிடிக்கின்றேங் கண்டதார் சொல்
லூட்டுகின்றே முறங்குகின்றே முளவாய்ந் தோனங்
கொருவார்த்தை யின்றியுயி ரெடுப்பா னென்போம்
ஆட்டுகின்றே னிவனுக்குங் கபாலீ சன்ற
ளண்டுவோ மூழின்றலைப் பிண்டுப் போமே. (௨௨)

நல்லவரைத் தீயவரை ஞானி யோரை
நடுநிலையி லுழைப்போரை நமனு னோரை
நெல்லதன்முன் புன்முளைத்துத் தழையும் வண்ணம்
நீருதவிச் செய்வதெனு நெறிபொய் யாகா
வல்லமொழி நிலைக்கநன்மை வழங்கிக் கார்க்கு
மஹாதேவ தேவனென விடைமீ தூர்ந்து
எல்லவர்க்குங் காட்சிதருங் கபாலீ சன்று
லெந்நாளுந் தஞ்சமென மன்னு வோமே. (௨௩)

நினைப்புமறப் பற்றயிடஞ் சமாதி யாக
நெடுஞ்சுருதி குருஸ்வானு பவம தாகு

மனைத்தையும்விட் டதற்குவவ னவனே சாட்சிய
மல்லாது மற்றவர்க ளுரைமெய் யாமோ?
மனைத்துறவும் வனத்துறவு மொன்றே யாகும்
வனப்பதிலே சிந்தைகெட்டு மயங்கார்த் தன்மை
நினைப்பொழுது மறவாது கபாலீ சன்றாட்
சேவிப்போமன் றேல்நம்முயிர் சாவிப் போமே. (சச)

சித்தமதே கோயிலென்போஞ் சிவனங் கென்போந்
தோதுவே தேகம்பூசைத் திருவிழா வென்
றுத்தமர்கட் பலகாலுஞ் சோதித் தாழ்ந்து
வுரைத்துமறை யெனமறைத்த வுளவை சிவ
முத்தர்களுஞ் சொல்லாமல் மௌன வாழ்வில்
மூழ்கினரா லெவ்வுயிர்க்கு மின்ப மீதல்
மெத்தவுங் கடினமதால் கபாலீ சன்றாள்
வேண்டிநலந் தருகவினைத் தாண்டு வோமே. (சரு)

இருப்பதுபொய் போவதுமெய் யென்று முற்று
மிவண்டிறந்த பட்டினத்தார் மொழியைப் போலுங்
கருத்துடனே யிரந்தாலும் பொய் வேண்டாமை
கலைவாணி யௌவையருங் கணித்த வண்ண
மொருத்தருக்குந் தீங்குசெயா தற் பவித்தோ
ருடற்குழைய கண்ணீர்சோர வழுது கெஞ்ச
பொருத்தமுட னலந்தந்த கபாலீ சன்றாட்
புனிதமுறப் பவமகல நினைந்துய் வோமே. (சசு)

நாய்நரிபேய் மண்ணும்பெண் ணுந் தனதென் றெண்ண
நடலைமிகு வுடலையெடுத் தென்ன கண்டோம்
வாய்செவிகண் மூக்குமெய்யுட் செறிந்த நாற்ற
மாற்றில்லோங் காற்றூடி யலைதற் சான்று
மேய்க்கின்ற சிந்தைவழிச் சென்றுக் கெட்டோ
மிதைபெரியோ ரெடுத்துச்சொன்ன லெகிரி வீழ்வோஞ்
சாய்க்காலி விழியாமல் கபாலீ சன்றாட்
சனனமற மனனஞ்செய்துத் தழைப்போ மியாமே. ()

மரம்பழுத்தால் வௌவாலுக் கெவரோ சீட்டு
வரைந்திடுவ ரதுதானே வலியச் செல்லும்
வரம்பெற்ற நல்லவரு மவைமெய் யென்று
வாழ்க்கையைவிட் டேகாந்த நிலைமைக் கொண்டார்

சரவசர மெவைக்குமிது சாட்சியாகுஞ்
சத்தகன்றூற் சித்தெங்கே? சமத்வ மெங்கே?
சிரங்கரத்தி லேந்திய கபாலீ சன்ற
டேடிப்புகழ்ப் பாடிநலங் கூடு வோமே. (சஅ)

தன்னிடத்தி லில்லாது வெளியி லேது
சங்கற்ப மற்றவர்க்கீ துண்மை யாகும்
முன்னிலையேற் பின்வருதர் கரசுண் டாமோ?
மூண்டெழுகன் மத்தியில் மூழ்கி நிற்குந்
தன்மையற்ற சாதுசங்கத் தினரே நல்லோர்
சற்குருவே சிவமெனவே சார்ந்து வாழ்வர்
மின்னுஞ்சந்திர சேகரன் கபாலீ சன்றள்
விரும்பிதொழு தருண்ஞானப்பா லருந்து வோமே. (சக)

மண்டையுள வரையிற்சளி போவ தில்லை
மாற்றூனை யன்றிவுயிர் மறைவதேது
கண்ணையன்றி நன்மைதீமைக் கலப்ப துண்டோ?
களவுமுள வில்லாது நடைப் பெறுது
குண்டரெனுங் குண்டுணிக ணிறைந் திடத்தே
கோணல்மிகுங் குணங்கிடையா தனுப வம்போல்
தொண்டர்தமக் கெளியவன் கபாலீ சன்ற
டோத்தரிப்போ மனுதும்வினை நீத்துப் போமே. (ருo)

ஆசனங்கட் பலவிரித்து தபங்கட் செய்வோ
மந்தரங்கம் பஹிரங்க மென யிரண்டு
பாசனைக ளுண்டவைக ணடங்கே தீரும்
பத்தியைப்போற் சித்தியுண்டு முத்தி யுண்டு
நேசமெனு மன்பன்றி சிவம் வேருக
நிச்சயிக்கு ஞானமொழி யெங்கு மில்லை
மாசகன்று சனனமற கபாலீ சன்றுள்
வணங்குவோ மற்றெவைக்கும் பிணங்கு வோமே. (ருக)

மண்ணுன தலைமுடிவில் மண்ணைப் போகும்
வஞ்சனைங் கீர்த்திடம்பம் மாய்கை யாகும்
எண்ணெழுத்துங் கண்கருத்து மிறைவ னென்போ
மிழிவழியி லவைகளையே செல வழிப்போம்
புண்ணியஞ்செய் வோமதற்கு ஏறியா வண்ணம்
புன்செயலை முடித்திடுவோம் புகலங் கில்லை

பண்ணிசையாற் பரீதர் துதி கபாலீ சன்றட்
பற்றகன்று வுள்ளபடி பணிவோ மியாமே. (௫௨)

பொன்மண்ணு ளிருந்துவெளி யாகும் வண்ணம்
பொய்யகன்றா ரிடஞ்சிவமும் போற்றக் காணு
மென்னுமொழிச் சிறிதுமிலா யேழை நெஞ்சு
ளிருந்தெழும்பு மமதையெல்லா மாயைக் கூத்து
மன்னமன்ன வொவ்வொன்றா யழித்தார் முன்னோர்
மஹான்களெனத் தொழுதேத்த வரமும் பெற்றார்
கன்னலென யினித்திடுங் கபாலீ சன்றட்
கரணமொன்றா கியேவணங்கிக் கதிகாண் போமே. ()

நாய்க்கடிக்கு மதைக்கடிப்பார் நாட்டி லில்லை
ஞானியர்க்கு மூறுந்துயருண் டேற்க மாட்டார்
வாய்க்கடிப்பான் மனநசிக்கு மியாவு நாச
மாகும்பின் கலப்பதில்லை நீங்கிப் போகும்
தாய்க்கடிப்ப துண்டுவஃது மூத்த மாகுந்
தான்சுரக்கும் பாலருந்திப் பிழைப்ப துண்மை
சேய்க்கடிக்கப் பொறுக்குந்தாய் கபாலீ சன்றட்
சிந்தைவைத்து வந்தித்து சீர்க்கொள் வோமே. (௫௪)

பசியற்றார்ப் பசையற்றார்ப் பாச மற்றார்
பண்ணும்பல் கன்மதன்ம சன்ம மற்றார்
சுசியற்றார் ருசியற்றா ரொடுக்க முற்றார்
தோற்றுமுயி ரனைத்துந்தா மெனுநூல் கற்றார்
நிசியற்றார்ப் பகலற்றார் நெடு நாளாக
நேசமுற்று வளர்ந்ததெலாம் நீக்க லுற்றார்
நசிவற்றா ருள்ளம்வாழ் கபாலீ சன்ற
னுமொருங்கே பக்திசெய்து நசைதீர் வோமே. (௫௫)

ஊர்மெச்சப் பால்குடித்தாற் பலனென் றில்லை
வுடல்வலுக்கப் பருகுதலே பாக்கிய மென்பார்
ஆர்மெச்சி லென்சிறப்பு கௌரவத்தா
லார்வமுற்று வெகுகோடி யழிந்த மெய்ப்பொய்
சீர்மெச்சும் பலசாத்திரம் படித்துங் கேட்டுஞ்
செகசால வித்தையினிற் றேர்ந்தாய்த் தொண்டர்
நேர்மெச்சும் படிவருங் கபாலீ சன்றா
ணியமமுட னுளமதனில் வயங்கொள் வோமே. (௫௬)

மதியிலா வானமதுப் பயன்படாப் போன்ம்
மதிப்பிலா யேழைகதி யதுவே யாகும்
நிதியில்லான் பிறவிகளிற் கடையென் றென்பர்
நிரதிசயா னந்தமிலான் சென்ம மல்ல
பதியிலா நகர்வளமைப் பாழ தாகும்
பற்றிலான் கேண்மையதிற் பவிசங் கேது
அதியிலா ரறியொணு கபாலீ சன்ற
டிணைக்கொள்வோ மவனருளைப் பிணைக்கொள் வோமே.

பாலதி லேடுத்தயிர்மோர் நெய்யும் வெண்ணெய்ப்
பலித்திடும்பின் னதைப்பாலாய்ப் பணிக்க லாகா
மாலகன்று சிவமயத்திற் கலந்து விட்டால்
மாற்றுதற்கு முடியாது மருந்தோ வில்லை
மூலமுணர்ந் ததன்வயமாய் மூழ்கி சீவ
முத்தரென வுலகந்தொழக் கண்டு மாயக்
கோலமதி லலையாமற் கபாலீ சன்றட்
குலவிகலம் பெற்றுசதா யிலகு வோமே. (ருஅ)

நற்றகைசேர் சனனங்கொண்டு நாட்டம் போல
நரைதிரையு மூப்புடன் சாக்கா டெய்தி
வுற்றநிலைத் தனிலோய்க்துட் கார்ந்து முத்தி
யூர்ப்புகுந்து கிட்டையினி லுறங்க னன்றும்
மற்வர்க்குச் செயுந்தீது தனக்கே யல்லால்
மரத்தின்கனி கீழ்விழும்போல் வாய்த்தே தீரும்
பற்றொழிந்தோர்ப் பணிசெயுங் கபாலீ சன்றட்
பத்திசெய்து முத்திவழி நத்து வோமே. (ருகூ)

குருடனையி ராஜமுழி விழிக்கச் சொன்னற்
கூடாதுக் கூடிடினுங் குறையுண் டாகும்
அருளிலார் தவந்தான மதற்கே சாட்சிய
மனுசரித்த வுத்தமர்க்கே யிடுக்கண் செய்வார்
இருளரையு டாய்ச்சுமக்கா விடிஞு மேது
யிவணடை நன்மைத்திமை யேன்வந் தானுங்
குருமொழிகொண் டடியர்த்துதி கபாலீ சன்றட்
கும்பிடுவோந் திருவருளை நம்பு வோமே. (சூ0)

தன்மார்த்த காமிய மோக்ஷங்க ளாகுஞ்
சதுர்விதத்தி லொருவிதமுஞ் சார்ந்த தில்லை

சன்மார்க்க மூளப்பெரியோர்த் தன்னை நாடி
தனுமார்க்கங் கற்றதிலைச் சாண் வயிற்றுற்
பன்மார்க்கந் தனிலிழிந்துப் பாவச் செய்கைப்
படிந்ததனுற் சனனம்வந்தும் பயனிலாதாற்
சொன்மார்க்க நிலைதருங் கபாலீ சன்றட்
சூழ்வோங்தொண்ட ருடன்கூடிநாம் வாழ்குவோமே. ()

மணிக்கட்டியப் பானையிலே வோசை யுண்டு
வயிற்றுக்கோர் பருக்கையதி லகப் படாது
பிணிக்கட்டி யதைமூடி வாச மூட்டிப்
பிரபலமாய் வாழ்ந்துகன்மஞ் செய் துயர்ந்த
துணிக்கட்டி கௌரவமாய்த் தூக்கிச் செல்வோங்
துணையாகா தொருநாளில் மறைந்துப் போகும்
அணிக்கட்டா யடியர்சொல் கபாலீ சன்ற
ளனுதினமு மனனங்கொட்சீ ரடைகு வோமே. (சுக)

பிடித்தப்பிடி குரங்கழியா முனம் விடாது
பிரபஞ்ச வாசனையு மதைப்போ லாகும்
அடித்தவடி மறைந்துவிடு மெழுத்தும் வாய்ச்சொ
லகண்டமாய் விரிந்துவடுத் தவரைக் கொல்லும்
குடித்தவவை யேப்பமதில் வந்தே தீருங்
குணங்கெட்டா லதைத்திருப்ப முடியா துண்மை
மிடித்தவிர்த் தாட்கொளுங் கபாலீ சன்றள்
விடாதபடித் தொழுவோம்அடா தனைத்தும் போமே. ()

உண்ணுங்கூலி யுடற்காயுழைத் துயிர்த் தள்ளாடு
மூமைக்கண்டக் கினவெனவே யொழிந்துப் போக
எண்ணுங்கூலி தனக்காகப் பாடு பட்டு
யென்கண்டா யிட்டவர்பா லிருந்து நொந்தாய்
பண்ணுக்கூலித் தருஞ்சிவனே யொருவ னல்லாற்
பாருளோ ரறிந்ததெங்கே? பயன்றா னெங்கே?
நண்ணுங் கூலித்தருங் கபாலீ சன்று
ணடிதொழு கூடுமிடி வோடிப் போமே. (சுரு)

எண்ணியெண்ணி யெழுத்தெழுத்தா யெழுத லெல்லா
மென்செய்யு மதனுண்மை நிலைத்தா னன்மை
பண்ணியது பூசைதப மந்திர யாகம்
பாருலகோர் மதிப்பதற்கோ? பரன் றனக்கோ?

புண்ணியஞ்செய் முன்னோர்க டமக்குக் கீர்த்தி
புகழ்வேண்டா தறம்புரிந்து போற்றி நின்றார்த்
திண்ணியநல் வரமருட் கபாலீ சன்றாட்
சிந்திப்போ மைந்துமொன்றாய் வந்திப் போமே. (உச)

தவஞானப் படிவருக்கு நன்மைத் தீமை
தனைவேண்டா நிலையாய்ந்துத் தனைத்தான் கண்டா
லவஞானம் போக்கியருட் கணங்க ளாக்கி
யாட்கொள்வா னெனநம்பி ஞான்று மன்யாஞ்.
சிவஞான பாஸிய வியூகச் சீர்சால்
செழுந்தொடைய லாகும் பாமாலை தன்னை
நவஞான வடியர்பணி கபாலீ சன்றா
ஞனில மெலாம்புகழ நவில்வோ மியாமே. (உரு)

---

## நவமணிக்கவசம்.

## தயைச்செயுத்தண்கழ டனை நினைந்தேத்துதல்

---

### வெண்செந்துறை.

சருவமு முனதுயிர் சகஸ்ற்றிர நாமச்செய
லுருமறைத் திருநெறி யுணர்ந்திடி லவண்படுந்
கருணையு டலங்கிடுங் கடவுளே மிடிதுடைத்
தருடர வேண்டுமென் றடிபணிந் தேத்துதல்.

---

### இயலோலிவிகற்ப சந்தவண்ணத்துளகம்.

சிரித்தீர் முப்புரத்தை யெரித்தீ ரண்டரையா தசித்தீ
ருள்ளமது களித்தீர் விளித்தீர்பர சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே – மஹா
தேவனே தேவர்களுண் மூவனே மூவருள் முதல்வனே
முத்தொழிற் கிறைவனே பரிபூரண சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே – உமா
தேவிமை சத்திசிவ காமியை மாதவர்க ணேமியை
ஞானக்கலி யாணியாய் விளையாடல்செய் சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே – மகிழ்வாய்த்

தரித்தீர் திங்களையுங் கங்கையை பொங்கரவ சிங்கியை
தங்குமணக் கொன்றையைச் சடைமுடிமேல் சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே – சருவ
சாட்சியே மாமறையின் சூட்சியே கண்டவர்கண் மாட்சியே
தாழ்ச்சியிலா ஆட்சியைக் கடாட்சிபர சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே – சிற்பர
சம்புவே யேழைமிக வெம்பியே கூவிக்குரற் கம்பியே
சம்பன்னக்கழ னம்பிதொழுதே னம்பல சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே – கரியை
யுரித்தீ ருடையெனப் பணித்தீர் படைசூலம் விணித்தீ
ருவப்பால்தீ தணித்தீர் திகழாலல சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே – ஆகம
வுருவே கலைறயிலாதத் திருவே வருடருகுங் குருவே
தெளிந்தசுவை நறவே பரமசிற் சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே - மஹா
யோகனே மாசில்லாவி வேகனே யெழினிறைத் யாகனே
சருவவை போகனே கருணீக சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே - எமன்முனூர்ப்
பரித்தீ ரவன்விழ வுதைத்தீர் பாலனையா தரித்தீர்
வரந்தரவா சரித்தீ ரிமையோர்த்தொழுஞ் சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே - மெய்ஞ்ஞானப்
பருணித பரம மஹேச சிவகயி லாசத்
திருமயிலை வாச ஸ்ரீகபாலீச நின்பொன்னடியைப்
பணிந்தேன் திருவெண்ணீ றணிந்தேனின் மகிமை
நினைந்தேன் றணியுறத் துணிந்தேன் றயைச்செய் சரண்
சரணே அரஹர சிவமே அரஹர சிவமே. (க)

நடித்தீர் தில்லையில்வாய் மடுத்தீர் நந்தன்கருத்தைத் தொடுத்தீர்
மாயசோலியர் நடுக்குற்றுத் திடுக்கிட சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே - அடியர்க்கு
நல்லவா யாவுஞ்செய வல்லவா புல்லறிவில் வெல்லவா
வினைப்படலஞ் சொல்லவாவோ ரெல்லையிலா சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே – நடுநிலை
நாயகா சத்வகுணத் தூயகா சிவபோதத் தாயகா
எவ்வுயிர்க்கு நேயகா சகாயசதா சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே – ஆலகாலத்தைக்

குடித்தீர் துன்பஞ்செய்யாதுத் தடுத்தி ரதன்வலியைக் கெடுத்தீர்
தேவர்க்கருட் கொடுத்தீர் கிருபை மடுத்தீர் சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே - அன்பர்மனக்
குன்றே கருணைஞான மின்றே தயைசெய்மிக நன்றே
யன்றே லுயிரைக் கொன்றே விடுதற்சுகஞ் சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே - தெய்வக்
குணமே விஞ்சைமலர் மணமே கைவிடினோர் க்ஷணமே
வுயிர்ப்போம் நாற்றப் பிணமே ஆகாமுன்கண்பார் சிவமே அர
சிவமே அரஹர சிவமே – அன்பரெண்ணம் [ஹர
முடித்தீர் தீயவுடலை யிடித்தீ ரடியருக்காய்த் துடித்தீ
ரயன்சிரமொன் றொடித்துக் கையிலேந்திய சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே – ஏழையின்
முறையே கேட்டருளு மிறையே அறிவிற்காணும்
பிறையே தீர்த்திடுமூழ்க் கறையே மறையேசதா சிவமேஅரஹர
சிவமே அரஹர சிவமே - எங்கும் விளங்கு
மூர்த்தமே பாவம்போக்குந் தீர்த்தமே ஞானதேக க்ஷேத்ரமே
வரந்தருந்திரி நேத்ரமே சற்பாத்திர சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே – தமிழ் வேதத்தைப்
படித்தீர் பற்றுளோர்மு னொடித்தீ ரசுரருயிர்க் குடித்தீர்
மான்மழுகரம் பிடித்தீர் சௌபானபர சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே – மெய்ஞ்ஞானப்
பருணித பரம மஹேச சிவகயி லாசத்
திருமயிலை வாச ஸ்ரீகபா லீச நின்பொன் னடியைப்
பணிந்தேன் றிருவெண்ணீ றணிந்தேனின் மகிமை
நினைந்தேன் றனியுறத் துணிந்தேன் றயைச்செய் சரண்
சரணே அரஹர சிவமே அரஹர சிவமே. (உ)

ஆட்டினீ ருலகனைத்தும் பூட்டினீ ரிருளிலனல் மூட்டினீ
ரமுதமங்கு னூட்டினீ ராசைநாட்டினீர் சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே - இச்செய்கை
அற்பமா செய்வதது சொற்பமா சாக்காட்டிற்கோர் கற்பமா
மறையாம னிற்குமா தற்சுதந்தர சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே – உனக்கடிமை
ஆக்கையா கடைவிழி நோக்கையா சன்மகன்மம் நீக்கையா
யெதுவரினும் போக்கைமா ஆக்கியழிக்குஞ் சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே - பழிவழியிற்

கூட்டினீர் மாயவலையை நாட்டினீ ராசைக்கயிற்றுள் மாட்டினீர்
தன்னெறிவிட் டோட்டினீர் காட்டினீர்ப் போதுஞ்சிவமே அர
சிவமே அரஹர சிவமே - உனைவிலையிற் [ஹர
கொண்டதா ரதன்றன்னைம விண்டதார் சினுண்மையுருகண்டதார்
சாகாஞானப்பா லுண்டதார் பண்டந்சண்டஞ்செய் சிவமே அர
சிவமே அரஹர சிவமே - முத்தியது கைக் [ஹர
கூடுமோ சிந்தைவிகற்ப மோடுமோ திருவருளைத் தேடுமோ
சாந்த தெய்வீகம் நாடுமோ பத்தி நீடுமோ சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே - எமன்மேற் கை
நீட்டினீர் பயந்தோடிட சாட்டியில் பம்பரம்போ லாட்டினீர்
தாட்டிகமாக வாட்டினீர் தீட்டினீர் சால சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே - அந்தவிதிக்கு
நேரமா செய்தவப சாரமா வெல்வதற்கென் தீரமா
சத்துருசங் காரமா வுபகாரமா சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே - மறைபுகழும்
நீதியே பன்னிருகலைச் சோதியே சருவத்திற்கு மாதியே
வேதநெறிக ளோதியே சாதிக்கும்பர சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே - நால்வர்ப் பாடும்
பாட்டினுக் குகந்துவேத யேட்டினு லற்புத முத்தி நாட்டினீ
ரானந்தபோக வீட்டினை யநுக்ரஹித்த சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே - மெய்ஞ்ஞானப்
பருணித பரம மஹேச சிவகயிலாசத்
திருமயிலை வாச ஸ்ரீகபா லீசநின் பொன்னடியைப்
பணிந்தேன் திருவெண்ணீ றணிந்தேனின் மகிமை
நினைந்தேன் றனியுறத் துணிந்தேன் றயைச்செய் சரண்
சரணே அரஹர சிவமே அரஹர சிவமே. (௩)

கார்த்தி ருயிரனைத்து நீர்த்திரை யென தேகத்தை யார்த்தி
யவைப்பலனிற் பூர்த்தியதாய் நடத்துஞ் சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே - உண்மைக்
கல்லாதவன் நன்றிசற் றில்லாதவன் புலனை வெல்லாதவ
னியாவர்க்கும் பொல்லாதவன் றெரிவாய் சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே - இல்லாதக்
காலமா வுலகவிந்த்ர சாலமா மாய்கையதின் கோலமா
பாவமலிஸ் தூலமா வினை மூலமா சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே - தொண்டர் துயர்த்

33



திர்த்திர் ஞானமிலார்மேல் வேர்த்திர் சனனவழி சேர்த்தி
ருகந்தவரைப் பார்த்திபனு யமைத்த சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே – இம்மொழித்
திடமா அறிவிலேனியான் மடமா விடமுடையப் படமா
வுடைக்கட்டிடும் வடமா யென்மே லடமா சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே - அருணிறைச்
சித்தனே தேவர்க்கெல்லாங் கர்த்தனே மெய்ஞ்ஞானபரி சுத்தனே
சிவர்கண்மீது பித்தனே அத்தனே சதாசிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே - வேதாகமஞ்சொல்
கிர்த்திக ளறிந்துதொழ சிர்த்தியுண் டனுகுமூழ்ப் பேர்த்து
யெரிந்திடுநன் னேர்த்தி யறிபவரியார் சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே - உனைவணங்காக்
கேடன் சன்மார்க்கமிலா மூடன் பார்த்தோர் வெறுக்கும்
வேடக் தாங்கிடுமஹா தோடன் றனைத்தள்ளாதே சிவமே அர
சிவமே அரஹர சிவமே - மாயையில் [ஹர
கெட்டேன் றன்பநடையைத் தொட்டே னல்லோருறவை
விட்டேன் பழியதற்குட் பட்டேன் மட்டளவிலாச் சிவமே அர
சிவமே அரஹர சிவமே - ஏழை துயர்ப் [ஹர
பார்த்தி ரிலையென்போலத் தூர்த்த ஞெருவரையு நாற்றிசையும்
வணங்கப் பார்த்தனுக்குத் துணைசெய்த சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே - மெய்ஞ்ஞானப்
பருணித பரம மஹேச சிவகயி லாசத்

183653

திருமயிலை வாச ஸ்ரீ கபா லீசநின் பொன்னடியைப்
பணிந்தேன் றிருவெண்ணீ றணிந்தே னின்மகிமை
நினைந்தேன் றனியுறத் துணிந்தேன் றயைச்செய் சரண்
சரணே அரஹர சிவமே அரஹர சிவமே. (ச)

தாங்கினீர் சிவரையெல்லா மோங்கினீர் கன்மமுதிர யேங்கினீ
ருளவறிந்தப் பாங்கினீ ருமைப்பங்கனே சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே – பாருங்கடைக்கண்
சாடையா யானிங்கொரு பீடையா யேழைக்குற்ற கேடையா
தூக்கவொரு பாடையா மண்மேடையா சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே – உண்மை சொன்னால்
தர்க்கமா கூட்டுறவு வர்க்கமா நீசனுக்குஞ் சொர்க்கமா
நாற்றப்பிணமும் நிற்குமா கடைவிற்குமா சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே - தேவரீர்க்கண்டு

நீங்கினீர் நிலையுணர்ந்து சோங்கெனுங் கலையிலேறித் தூங்கினீ
ரறிவிலோய்ந்துத் தூங்கிலீர் வெளிக்கண்மூடி சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே — வெளியிற் சொன்ன
ணீமோ யதார்த்தவழி நாடுமோ கண்ணீர்க்கசிந்துப் பாடுமோ
ஆனந்தமீறி யாடுமோ யன்பிற் கூடுமோ சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே — கண்டுணரில்
நித்தியமே உழைத்தவர்க்குட் சத்தியமே யிதற்குவுண்டுபெத்தியமே
பிசகிடி லகத்திய மத்திபந்தருஞ் சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே — ஆதலாற்பின்
வாங்கினீ ரண்டர்கட்குத் தீங்கிழை யசுரர்களை வஞ்சகநஞ்
சுண்டமைப்போல் மறுத்தீர் தொழப்பொறுத்தீர் சிவமே அர
சிவமே அரஹர சிவமே — இம்மொழி [ஹர
மாறுமா சனனங்கடைத் தேறுமா ஆனந்தபோகஞ் சேருமா
உண்மை ஞானச்சீர் கூறுமா நன்மை வீறுமா சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே — மனக்கோயிலுள்
வந்தரு டியானநிலைத் தந்தருட் கந்தமிகு சுந்தரப்
பதமேகதி வந்தித்தே னுமைமகிழுஞ் சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே — சருவத்துட்
பாங்கினீர் மெய்யன்பருண் தீங்கனி மாங்கனியே நற் பண்ணவாயென்
சோலிதனை யெண்ணவா யெண்ணிக் குண்ணவா சிவமே அர
சிவமே அரஹர சிவமே - மெய்ஞானப் [ஹர
பருணித பரம மஹேச சிவகயி லாசத்
திருமயிலை வாச ஸ்ரீகபாலீச நின்பொன்னடியைப்
பணிந்தேன் றிருவெண்ணீ றணிந்தேனின் மகிமை
நினைந்தேன் றணியுறத் துணிந்தேன் றயைச்செய் சரண்
சரணே அரஹர சிவமே அரஹர சிவமே. (௫)

இட்டமா யெல்லாம் படைத்துட் பட்டிருட் குகைக்குளுயிர்க்
கட்டுடன் வினையாம்வித்தை நட்டவா நட்டுவாதிக்குஞ் சிவமே
சிவமே அரஹர சிவமே — அந்தரங்கத்தி [அரஹர
விட்டதா மாயப்பெண்ணாலே சுட்டதா கடுத்தெருவில் விட்டதா
யறியாமலுட் பட்டதா தொட்டுக் கெட்டதா சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே - கார்நிலத்தி
னீரமா யென்செயலறி கோரமா கருணைசெய்ய பாரமா
கண்காணுந் தூரா தூரமா ஆரணம்பணி சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே — ஆலவாயினில்

அட்டமா சித்திகட்செ யண்ணலே புண்ணியர்சதா நண்ணியே
யருகிற்றுதிப் பண்ணவே வரம்பணித்த சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே - ஏழைமிக
அஞ்சினேன் கதியிலாது கெஞ்சினேன் பஞ்சநெருப்பாய்
துஞ்சினேன் றுகள்மிஞ்சினேன் விஞ்சைபதந் தஞ்சந்தரும்
சிவமே அரஹர சிவமே - எனக்கிவ்வுட [சிவமே அரஹர
லத்தமோகள்ளவேடச்சித்தனேவஞ்ஞானமிகுப் பித்தனேபொய்ப்
பத்தனேவுன் மத்தனே சித்தந்தெரிவாய் சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே - எனையாட்கொள்ள
கட்டமர் கட்டியவீடு காடையா வுண்டொன்பது வோடையா
யிருளடைந்த நாடையா யென்றுங் கேடையா சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே - வந்துவுண்மைக்
காட்டையா வாசல்தனைப் பூட்டையா நாய்நரிக்கழுகு வேட்டையா
யருட்பாலதை யூட்டையா சேட்டையொடுங்க சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே - வாசிநிலைக்
காணுமே பேரின்ப வீடுத் தோணுமே யெந்நாளுமன்புப் பூணுமே
மாய்கையைக்கண்டா ஞுமே வேணுமே தயை சிவமே அர
சிவமே அரஹர சிவமே - எல்லாமுனதுப் [ஹர
பட்டமே மண்ணுமெனதுப் பட்டமேவுண் டாகமத்தின் சட்டமே
நடக்கவொண்ணு திட்டமே மஹா நுட்பமே சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே - மெய்ஞ்ஞானப்
பருணித பரம மஹேச சிவகயி லாசத்
திருமயிலை வாச ஸ்ரீகபா லீச நின்பொன் னடியைப்
பணிந்தேன் றிருவெண்ணீ றணிந்தேனின் மகிமை
கிணந்தேன் றனியுறத் துணிந்தேன் றயைச்செய் சரண்
சரணே அரஹர சிவமே அரஹர சிவமே. (௬)

சாத்திரா சருவஞானத் தோத்திரா வுயிர்கட்கெல்லாஞ் சூத்திரா
சூத்திரக்கயிற்றுட் சொக்கிட தக்கிடுந்தக்க சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே - முடிவில்
தத்தையா தையாதையா துத்தையாதுத் தாரிபூரி வொத்தையா
சத்தமிடவே கத்திசுடலைப் போகுமே சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே - அப்போது
தாம்தாம் தக்கதக்க தீம்தீம் தீந்தோமென தரிசரி
கிடவெனத் தான்றனிக் கிடக்கும்வேளை சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே - கார்க்குந்திரி

நேத்திரா பாவத்தின்மேல் க்ஷாத்திரா வந்தருளோர் மாத்திரைப்
பொழுதாகிலு மேத்தரு முயிர்ப்பிழைக்குஞ் சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே — அழுக்காடையை
நெய்யுமா வுண்ணப்பாலு நெய்யுமா யிலேசருகி னையுமா
சந்ததந்துதி செய்யுமா தீமை நையுமா சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே — வெறும்வாய்
நீட்டமே யொருகல்பட வோட்டமே வுலகஞ் சந்தைக் கூட்டமே
நானதிலொரு காட்டாண்மை நடத்த லென்சொல் சிவமே அர
சிவமே அரஹர சிவமே — நினைத்தொழார்மேல் [ஹர
காத்திரா நத்தினரைக் கார்த்தவா அன்பின்மலர்ப் பூர்த்தவா
நின்னுருவிற் சேர்த்தவா பழிதீர்த்திடுஞ் சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே - தவநிறைஸ்
கந்தமே நால்வர்கட்ப்ர பந்தமே யெங்குஞ்சுகா னந்தமே
சைவமறை யந்தமே மஹாசுந்தர சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே — தூயசிந்தைக்
கண்ணுளே சர்வபூதிய மண்ணுளே யகண்டவெளி விண்ணுளே
மெய்த்தொண்டர்பாடும் பண்ணுளே யண்ணலாய்வருஞ்சிவமே
சிவமே அரஹர சிவமே — நன்மைசூழ்சற் [அரஹர
பாத்திரா நாத்திகர்க்காணு வாத்திகா தாத்திரைமன்னு மூர்த்தியே
கீர்த்திசொல்லினுல்வாழ்த்திட வரந்தாளுஞ் சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே - மெய்ஞ்ஞானப்
பருணித பரம மஹேச சிவகயி லாசத்
திருமயிலை வாச ஸ்ரீகபா லீசநின் பொன்னடியைப்
பணிந்தேன் றிருவெண்ணீ றணிந்தேனின் மகிமை
நினைந்தேன் றனியுறத் துணிந்தேன் றயைச்செய் சரண்
சரணே அரஹர சிவமே அரஹர சிவமே- (எ)

அங்கமே சத்தியப்பிர சங்கமே மாற்றுயர்வி லங்கமே
பரிபூரண லிங்கமா யெங்குநிறைந்த சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே - ஏழைப்படுந்
துன்பமே தேவருக்கு யின்பமே தீராதோ? பாழுங் கன்மமே
தருகும்பல சன்மமே தன்மமிலையோ? சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே - உனக்குண்டோ
தூக்கமே யெனக்குண்டான சோக்கமே தயவாய்வையுநோக்கமே
பாக்கியமாகு மேக்கமுண்டல்லோ பெற்றோர்க்கு சிவமே அர
சிவமே அரஹர சிவமே - என்னைப்பெற்றத் [ஹர

தங்கமே நீநீங்கில்வரும் பங்கமே யெல்லாங்கைவிடுஞ் சங்கமே
பின்னுலனைத்து மங்குமே தங்குவதெங்கே சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே - தாரும்பிர
சாதமே வோடும்வினைமுக் காதமே கிருபாகர காதனே
பூதநாதமே சாதுக்கட்சதா வோதிடுஞ் சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே - கவிமணிச்
சந்தமே சிந்தையில்வா ழெந்தையே நிந்தையகன்றாழ் மந்தையின்
றொருந்தமகற்றிச்சொந்தமாய் மைந்தனைக்காருஞ்சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே - சர்வசங்காரச்
சிங்கமே தேடசியப் புங்கமே யாவுநிர்மித்த சித்தே விலையில்லாத
முத்தே வொத்து நிர்த்தஞ்செய் சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே - நல்லோருன்று
டேடினர் நின்புகழைப் பாடினர் வருமிடியைச் சாடினர்
நீடுமென் றஞ்சி வோடினர் கண்ணை மூடினர் சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே - தீயவழியிற்
சென்றேன் பழிபாவத்தைத் தின்றேன் மெய்யைப் பொய்யினல்
வென்றேன் பிரசித்தமாக நின்றே னன்றியறியேன் சிவமே
சிவமே அரஹர சிவமே - கற்பகவல்லிப் [அரஹர
பங்கனே பங்கயன்சிர மங்கையி லேந்தியடியார்க் கிங்கிதசீர்ப்
பங்கருள மங்களமாய் சாரிவருஞ் சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே - மெய்ஞ்ஞானப்
பருணித பரம மஹேச சிவகயி லாசத் ·
திருமயிலை வாச ஸ்ரீ கபா லீசநின் பொன்னடியைப்
பணிந்தேன் றிருவெண்ணீ றணிந்தே னின்மகிமை
நினைந்தேன் றனியுறத் துணிந்தேன் றயைச்செய் சரண்
சரணே அரஹர சிவமே அரஹர சிவமே. (அ)

ஐயனே யீராறுகலைக் கையனே தொய்தபதத்து னையமி
லாசுபுரி யற்புதசிற் பரதத்வ சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே - முன்செயனி
யாயமோ? ஆயினுமிது நியாயமோ கடவுட்செய்ச காயமோ
ஐயகோ யேதாதாயமே காயமாயந்தீர் சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே - கருணைதரு
மத்தனே வுனையுட்காணு மத்தனியா லுலகமெல்லாஞ்சுற்றினேன்
கத்திகத்திவே யெத்தினுற் பத்திகுன்றேன் சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே - கிழவியுர்சொல்



600 008

ஐய்யனே சொச்சொருப செய்யனே தாங்கமுடியா சோலியே
சொன்னால்வெளியிற் கேலியே பரிபாலிக்குஞ் சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே — மூப்பாழ்
சுழுத்திலே சுஞ்ஞானப் பழத்திலே யெண்சாண் முழத்திலே
யழுத்துவித் தொழுக்கமு மொடுக்கமான சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே — இதற்குணர்
தொம்பதந் தத்துவமசி பிம்பமா யம்பலத்தாடும் நம்பனே
நம்பினோருள சம்பிரம செம்பொன்னான சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே — வஞ்சக
வையக மெலாம்புரந்தாள் மெய்யனே வஷ்டபந்தன மந்திரா
மந்திரங்காணு தந்திரா சர்வசுதந்த்ர சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே — உள்ளதுரைத்தால்
வாதையா யிதுவிலேவிற் காதையா ஞானவெறிகொட் போதையா
பாவமோய்ந்திடும் பாதையா யேழைக்கேதையா சிவமே அரஹ [ர
சிவமே அரஹர சிவமே — ஐம்பத்தொன்றும்
வசியமா தெய்வமதற்குள் மசியமா சிந்தைப்பொருத நசியமா
கடந்துநின்ற ணிசியமா அசியமாகா சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே — பிறந்திறக்கும்
பையராய்ப் படையதினு லேயொருப்படியிப் பரதேசியின்
றுதிக்கிதங்கும் பாஸிய நேச மாசில்லா சிவமே அரஹர
சிவமே அரஹர சிவமே — மெய்ஞ்ஞானப்
பருணித பரம மஹேச சிவகயி லாசத்
திருமயிலை வாச ஸ்ரீகபாலீச நின்பொன்னடியைப்
பணிந்தேன் றிருவெண்ணீ றணிந்தேனின் மகிமை
நினைந்தேன் றணியுறத் துணிந்தேன் றயைச்செய் சரண்
சரணே அரஹர சிவமே அரஹர சிவமே. (௬)

## திருநெறிமறை.

## அருமைதனையுரைத் தண்ணலைவருந்துதல்.

வெண்செந்துறை.

திருநீற் றொளிதிகழ் செக்கர் வேணியனே
கருவினை யழித்திடுங் கபாலீச் சுரனே
பெருமைசே ரருணிறைப் பெட்புயர்ப் பதந்தொழ
லருமையி லருமையென் றுரைந்துவார்ப் பரித்தல்.

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

சீர்மன்னும் பலவடிவா யிலகுமுன துண்மைமலி
திருவுருவைக் காண்பதருமை
பார்மன்னு மூர்த்தமெலாந் தங்கிவிளை யாடுநிலைப்
பார்த்துநிழல் வாழ்வதருமை
பேர்மன்னும் மார்க்கமவை களிலே சைவக்குடியிற்
பிறந்தனு பவிப்பதருமை
தேர்மன்னுந் திருமயிலை ஸ்ரீகபாலீச் சுரனேநின்
சேவையருமையி லருமையே. (௧)

தெய்வநத் பதியாகத் திகழனைவர் கட்கெலாஞ்
சிறந்துயர்நின் மகிமையருமை
கைகண்ட வவிழ்தமாய்க் கற்பூர மலையாகக்
காணவுருக் கொண்டதருமை
பொய்யவிழ முப்புரமுங் காமன்றக்கன் பலவசுரர்ப்
பொடிபட நசித்ததருமை
செய்யமேனியா மயிலை ஸ்ரீகபாலீச் சுரனேநின்
சேவையருமையி லருமையே. (௨)

மூடியாகத் திங்கட்கங் கைச்சடை யரவமதை
மூடிநிற்பதுமா அருமை
அடியெனத் தரையினி லனைத்தையு மமைத்தாடல்செ
யந்தரங்கந் தெரிவதருமை
கடிகமழு மலர்நடுவிற் சிவலிங்க மானதாற்
காட்சிபெற நின்றதருமை
செடியகற்றுந் திருமயிலை ஸ்ரீகபாலீச் சுரனேநின்
சேவையருமையி லருமையே. (௩)

மூவடி தரப்பொறுக் காசுக்ரன் கண்பெற
மூர்த்தமா யெழுந்ததருமை
சேவைகொளு முமைமயிலாய் வடிவுற்ற தவமருமை
சேர்ந்துலகைக் காப்பதருமை
பரவமற வேதங்க டொழுமீனேஸ் வரனுகப்
பண்புகொண் டதுமா அருமை
தேவர்மலி திருமயிலை ஸ்ரீகபாலீச் சுரனேநின்
சேவையருமையி லருமையே. (௪)

பங்கயன் றலையோட்டை கையேந்தினதருமை மால்
பணிநந்தீ யானதருமை

துங்கமிகு வறுபாறல் வநந்திநவள் ஞவர்மற்றுந்
தோன்றிவலம் வருவதருமை
எங்கும்பணி யதுதங்க யெப்பொருளு நிகரிலா
தியாவுமாய் விளங்கலருமை
திங்களொளி திருமயிலை ஸ்ரீகபாலீச் சுரனேநின்
சேவையருமையி லருமையே. (௫)

புனலனலி லேடிட்டுப் புறச்சமய விருளகற்றி
புகழ்பெற்றச் செயல்களருமை
அனவரதந் தொழுமறைக் கதவமடைத்ததும் பெண்போ
லாண்பனைக் காய்த்ததருமை
மனங்கலங்க யிறந்தவணி கன்மணங்கொண் டதுமெலும்பு
மங்கையா யெழுந்ததருமை
தினகரனே திருமயிலை ஸ்ரீகபாலீச் சுரனேநீன்
சேவையருமையி லருமையே. (௬)

சைவமதை நீங்கியே சூலைநோ யடைந்தும்பின்
சார்ந்துநலம் பெற்றதருமை
மெய்யறிய விடமுண்டு நீற்றறைக் குளிர்ந்தானை
விழுந்துதொழ நின்றதருமை
கைவர கருங்கல்தெப்ப மானதும் பாம்புகடித்தக்
கான்முளை யுதித்ததருமை
தெய்வீகத் திருமயிலை ஸ்ரீகபாலீச் சுரனேநின்
சேவையருமையி லருமையே. (௭)

அங்குமலர்ச் சாற்றியிங் குற்றுதடுத் திடக்காட்சி
யடைந்துபண்பாடியது அருமை
மங்கைபரவை யிடந் தூதனுப் பினதுஞ்செங் கல்பொன்னாய்
வாய்த்ததும்நெல் பெற்றதருமை
சங்கிலியை மணந்துவிழி யற்றுபெற்றதும் முதலைத்
தநயனைத்தந் ததுமாஅருமை
செங்கணனே திருமயிலை ஸ்ரீகபாலீச் சுரனேநின்
சேவையருமையி லருமையே. (௮)

அருங்குதிரை வாங்கமன்னன் றந்தபணத் தினிற்கோயி
லமைத்துபணி செய்ததருமை
குருமூர்த்தி யாய்வந்து தமிழ்வேதமெ ழுதியும்நரி
குலவிபரி யானதருமை

கருதிவிலங் கிடவுந்தொழ வைகைவர பிட்டுண்டு
காணுமற் போனதருமை
தெருணிறையுந் திருமயிலை ஸ்ரீகபாலீச் சுரனேசின்
சேவையருமையி லருமையே. (௯)

தில்லைவா ழந்தணர்க ளைறிகுறி யோகமும்போக
சிந்தைசெய னினைத்தலருமை
வெல்லமுடியா சூரன் திருநீறைக் காட்டிகொலை
மேய்ந்த வனுதியின்சேருமை
வல்லவர்ச் சுனன் தின்ன னுகவந்தஞ் சிவகேசரி
வணங்கலுன்கண் டந்ததருமை
செல்வமலி திருமயிலை ஸ்ரீகபாலீச் சுரனேசின்
சேவையருமையி லருமையே. (௧௰)

நாவிலை வித்தருங் கிலியம்பெற் றருளாலிங்கந்
தானிமிர வணங்கலருமை
மாலைகல வளசுந்தர் தரும் அருமை கழுத்தையரி
வாளைக்கைப் பிடித்ததருமை
மூலமுணர் குழலிசையுஞ் சந்தனமாய்க் கைதேய்த்து
மும்மையா லாண்டதருமை
சிலருறை திருமயிலை ஸ்ரீகபாலீச் சுரனேசின்
சேவையருமையி லருமையே. (௧௧)

மலர்மாலைச் சாத்தினது மைந்தெழுத்து முருத்திரம்
மறவாதோதினதும் அருமை
நலதேவர்மூ வாயிரவர்த் தொழுதிட கந்தனைவிழுங்கி
ஞானடஞ் செய்ததருமை
தவம்புகழுந் துணிமறைவத் தலையைக்கல் லதிற்புடைக்குந்
தருணம்வந்து தடுத்ததருமை
திலகமெனுந் திருமயிலை ஸ்ரீகபாலீச் சுரனேசின்
சேவையருமையி லருமையே. (௧௨)

மணலிலிங்க மமைத்தயிர்தம் வழங்கிபொறுக் காமல்கால்
வாங்கப்பூசை முடித்ததருமை
தனல்மனங்கொண் டிடப்பழித்த சமணர்களைக் கழுவேற்றி
சமயநிலை விளங்கலருமை [மெய்ச்
சுணம்போற்கனியு முருவமுங் காட்சிபெற்ற தருமைபணி
குருவின்பேரா லமைத்ததருமை

திணியர்மகிழ்த் திருமயிலை ஸ்ரீகபாலீச் சுரனேநின்
சேவையருமையி லருமையே. (௧௩)

வெண்ணெய்க்கொடாப் படியேச சலத்தில்விளக்கேற்றியபின்
விழியமணர்க்கெட்ட தருமை
எண்ணாது தூதுவிட்ட தலைப்பொறுக்கா சவன்சூலையுற்
றெழிலடையச் செய்த்தருமை
கண்போற்பசு மேய்த்திறந்தோ னுடற்குணுழைந் தன்புகந்து
கவிமந்திரஞ் சொன்னதருமை
திண்ணியர்சூழ்த் திருமயிலை ஸ்ரீகபாலீச் சுரனேநின்
சேவையருமையி லருமையே. (௧௪)

குறித்தறியைப் பறித்தவமண் பார்வையறக் குளமூழ்கிக்
குருடகன்றுப் போற்றலருமை
நெறியறியா சாக்கியர்கட் கஞ்சியேகன் மலமெறிந்து
நியமநிலையடைந்ததருமை
பெரிதுணர்ந்துப் பிள்ளையைச்சமைத்துண்மூன மறைந்ததும்
பின்பஃதுயிர்ப் பெற்றதருமை
தெரிவரியத் திருமயிலை ஸ்ரீகபாலீச் சுரனேநின்
சேவையருமையி லருமையே. (௧௫)

தாத்திரைமே லடியரைதூ ஷிப்போர்நாவைத் துண்டித்து
சைவநெறி நின்றதருமை
மாத்திரைப் பொழுதும்வழாப் பணியாலய மடம்புதுக்கி
வணங்கியமு தளித்ததருமை
பாத்திரராய்ப் பரமனையே பாடுவதுஞ் சித்தமொன்றாய்
பவித்தகுண மவ்வமிக்கருமை
சீர்த்திமலித் திருமயிலை ஸ்ரீகபாலீச் சுரனேநின்
சேவையருமையி லருமையே. (௧௬)

புல்தனக்குப் பதிற்கூந்த லவித்ததருமை பொய்ப்
புகன்றிடாப் புலமையருமை
வல்லதலை மச்சமதை விட்டதருமை வெண்ணீறு
மன்னினரை வணங்கலருமை
மல்புரிந் தடியர்க்கருண் மலிந்ததருமை அருமை
வாயிலார்ப் பெருமையருமை
செல்வநிறைத் திருமயிலை ஸ்ரீகபாலீச் சுரனேநின்
சேவையருமையி லருமையே. (௧௭)

அடியர்களைக் கண்டவுட னனந்த முகமலர்ந்து
வாதரித்த அன்பேயருமை
கடிகமழு மலர்ச்சாத்தி கண்ணீர்விட் டழுதுதொழுங்
கற்பனைகொள் வதுமிக்கருமை
படிமிசைத் திருப்பணிக் குதவுவது மாஅருமை
பண்போலிசைப் பாடலருமை
செடியகற்றுந் திருமயிலை ஸ்ரீகபாலீச் சுரனேநின்
சேவையருமையி லருமையே. (௧௮)

கல்லேனும் விலைபெறு மதற்கும் பாழாஞ்சன்மங்
காணுமலொழிவ தருமை
புல்லேனும் புகழடையு மவைக்குமிழி வானதிவண்
பூர்க்காததன்றோ அருமை
பொல்லாதவ னெனப் பூமியிற் றிரிவதினும்
போயடங்குவதே அருமை
செல்வமலித் திருமயிலை ஸ்ரீகபாலீச் சுரனேநின்
சேவையருமையி லருமையே. (௧௯)

ஊருக் குழைத்து வூதாரியா யலைவதிலு
முறவற்று நிற்றலருமை
வேருக்கு வெந்நீர்விடு வதினுமது விளையாது
வெட்டியெரித் திடுதலருமை
பாருக்கு ளொழியாதவஞ் செய்வதினும் பிறர்துயர்ப்
பார்த்திரங்குவது அருமை
தேருக்குள் வருமயிலை ஸ்ரீகபாலீச் சுரனேநின்
சேவையருமையி லருமையே. (௨௰)

ஆடிப் பாடித்தத்து வங்களடங் குவதிலு
மறிவோடு சேர்தலருமை
கூடிநீ டித்துன்ப நேடியகன் றிடுவதிலுங்
குறைநீங்கி மறைதலருமை
கோடிசெல வழிக்கினுந்தன் நாவைசெல வழிக்காது
குணம்பெறுதன் மிகவும்அருமை
தேடிதொழுந் திருமயிலை ஸ்ரீகபாலீச் சுரனேநின்
சேவையருமையி லருமையே. (௨௧)

சருவ சமயந்தனிலு முண்மையற் புதமிகுந்த
சைவமயந் தெரிதலருமை

திருநீறு ருத்ராக்கஞ் சிவமேனி யெனக்கண்டு
சிந்தித்துப் போற்றலருமை
கருணைபெற சிவசிவவென் றேதிசதா வணக்குதலே
கடவுண்மொழி யுணர்தலருமை
தெருணிறையுந் திருமயிலை ஸ்ரீகபாலீச் சுரனேயின்
சேவையருமைமி லருமையே. (௨௧)

பாடுகின்றப் பன்னிரண்டுந் திருமுறையு மதனருமைப்
பயன்றெரிந்துப் போற்றலருமை
கூடுகின்ற முதற்குண மிடையில் மாறவதிலுங்
கூடாமை மெத்தஅருமை
ஓடுகின்றத் தொழிலதிலுஞ் சகசமிட்டைக் கலந்
துட்காருஞ் செயன்மிக்கருமை
தேடுகின்றத் திருமயிலை ஸ்ரீகபாலீச் சுரனேயின்
சேவைபருமைமி லருமையே. (௨௨)

# இறைவனே குறைகடிந் திதங்குமென் றிறைஞ்சுதல்.

### வெண்செத்துறை.

பிறைகொன்றைச் சடைமின்னும் பிஞ்ஞகா வுயிர்க்குனே
நிறைத்தருட் செய்திடு நிமலனே வினையெனுங்
கறைபடு நெஞ்சினேன் கடையரிற் கடையேன்
குறைதவிர்த் திடுகெனக் குணக்கொண் டிறைஞ்சுதல்.

### பன்னிருசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

ஆணர்த கடனமிடு மன்னலே நின்மகிமை
யடியினை மறந்தகுறையோ
ஆசையெனு மோசவழிப் பாசமதை வீசியே
வாக்ரமித் தலைந்தகுறையோ
நானந்தவ மதையுலகோர்க் கண்டுகொண் டாடிடத்
தான்செய்து மகிழ்ந்தகுறையோ
நானென்ற வாணவப் பேயைத்தலை யேற்றியே
சண்டாள னானகுறையோ

ஈனக் குணத்தி னிடைபட்டு நடுநட்டு
யெழுநஞ்சைத் தின்றகுறையோ
எனக்கொருவர் நிகரெங்கு மில்லையென வாய்ப்பந்த
ரிட்டுமெதி கெட்டகுறையோ
மானம தழிந்துவா ழாமைநல மென்றுணரா
மைந்தனின் குறைதீர்த்தருள்
வானவர்க டொழுங்கயிலைத் தானிதெனுந் திருமயிலை
வள்ளலே கபாலீசனே (க)

சற்றேனு மிதக்கமில் லாதபெரி யோர்கட்கு
சஞ்சலங் கொடுத்தகுறையோ
தன்குறையைப் பிறர்சொல்வ ரெனவுணர்ந் தவர்கண்மேற்
சங்கற்ப மெழுதுங்குறையோ
பற்றுநீங் காதன்னை மக்கட்கு மென்பரிப்
பரதேசிக் கிலாதகுறையோ
பாவமூட்டையை வாங்கி கடைவழி துணைக்கொள்ள
பணத்தைசெல விட்டகுறையோ
சொற்களை மாற்றுவதும் பொய்யருரைக் கொள்வதுஞ்
சுபமென நினைத்தகுறையோ
சோபான முத்திரைக ளூற்றநிலைக் கற்றதாய்
துடுக்குகட் பேசங்குறையோ
வற்றாத செல்வமுண் டழியோம்மண் விழுங்காதெனு
மடையனேன் குறைதீர்த்தருள்
வானவர்க டொழுங்கயிலைத் தானிதெனுந் திருமயிலை
வள்ளலே கபாலீசனே. (உ)

நன்றிசெய் தவர்க்குவப காரஞ்செய் வதில்மிக்க
ஞானியென வாய்ந்தகுறையோ
நறவான வார்த்தையும் நஞ்சான வுள்ளமு
நயந்ததா னெருங்குங்குறையோ
பன்றிக்கு முத்தருமை பாவிக்கு அருளருமைப்
பலிக்குமென நினைந்தகுறையோ
பசுத்தோலை புலிபோர்த்து வஞ்சமதை முடித்தவசைப்
பற்றியே திரிந்தகுறையோ
ஒன்றிருந் தாலும்விதை குடுக்கையு மோசையுமுண்டெனு
மூண்மையறி யாதகுறையோ

உள்ளிக்கு தேன்வார்க்கிற் குணமாறி நலந்தருமென்
றுவமைநூற் படித்தகுறையோ
மன்றுளில்மூ வாயிரவர் பாம்பும்புலி தொழுதகழன்
மறந்தவென் குறைதீர்த்தருள்
வானவர்க டொழுங்கயிலைத் தானிதெனுந் திருமயிலை
வள்ளலே கபாலீசனே. (௩)

போகா விடத்திற்குப் போனகுறையோ போகாப்
போதும்பொய் விளைந்தகுறையோ
புகலுமொழி விலைப்படா யேழைகுறையோ வுலகம்
பொறுக்காத செயலின்குறையோ
ஆகாத்தி யத்திற்கு வரசனுப் நின்றுபொரு
ளழித்தாக்ர மித்தகுறையோ
அண்டினவ ரெவைசொலினு நம்பிசிரங் கொய்யவே
லதையேந்தித் திரிந்தகுறையோ
ஏகாந்தி பதியென வெண்ணியேவீ ணுட்கழித்
திடரதிற் பட்டகுறையோ
ஏற்பட்ட வினையறிந் ததைமாற்று மனுசெய்து
னிணையடித் தொழாதகுறையோ
வாகான குணமது மருந்துக்கு மில்லாத
மமதையுளேன் குறைதீர்த்தருள்
வானவர்க டொழுங்கயிலைத் தானிதெனுந் திருமயிலை
வள்ளலே கபாலீசனே. (௪)

வருவதறியா முதலிற் கலந்தவினை முடிவுவரை
வாட்டியே வோட்டுங்குறையோ
வாயைத் திறந்தவுட னுயை விரட்டுதற்போல்
மடங்கவடி பட்டகுறையோ
மருள்பிடித் தவனுலகை வணங்கியென்சொ லினுஞ்செவியில்
வாங்காதா லேங்குங்குறையோ
வஞ்சசெயல் முடித்துகை வழங்கியே தப்பித்தபின்
வலத்காரம் பேசுங்குறையோ
ஒருவரேனுந் துயர்கண் டிதவிசெயப் பெத்திலா
தோரியாய்க் கூவுங்குறையோ
ஓராம லொன்றுசொலி செவிடுபட பலக்கேட்டு
ஆமையாய்த் தவிக்குங்குறையோ

வருமானத் தாலியார்க்கு மதிப்புண்டென வறியாத்
வஞ்சனைன் குறைதீர்த்தருள்
வானவர்க டொழுங்கயிலைத் தானிதெனுந் திருமயிலை
வள்ளலே கபாலீசனே. (௫)

பழையசம யங்கைவிடாக் கிழமையனென யாவரும்
பட்சமற் றோடுங்குறையோ
பற்றுள்ள யிடமேவா லயந்தெய்வம் பந்துவெனப்
படித்திலா மூடக்குறையோ
குழைந்தேத்துஞ் சிவநாளிற் குட்டிச்சுவ ரதிற்றனியாய்க்
கோவென்றழு துறங்குங்குறையோ
கூடாதெலாங் கூடி குப்புற விழுந்தெழுந்துக்
கூத்தாடற் காணுங்குறையோ
உழைப்பெலாம் பாழல்லா லொன்றுங்கொண் டேகோமெனு
முண்மைகண் டறியாக்குறையோ
உயிரொழியும் வரையினுந் தனியெங்கே னுஞ்சென்று
வொளித்துத் திரியாதகுறையோ
மழையெனக் கண்ணீர்சொரிந் தழுதுகெஞ்சி வரம்பெறும்
வகைதெரியேன் குறைதீர்த்தருள்
வானவர்க டொழுங்கயிலைத் தானிதெனுந் திருமயிலை
வள்ளலே கபாலீசனே. (௬)

முன்போகம் விளைந்ததன் பின்போகங் குறைந்ததால்
முற்றுகைப் போட்டகுறையோ
முழுபூ சனிக்காயைச் சோற்றில்மறைத் திடற்போல
முதிர்ந்தவினை மூடுங்குறையோ
ஈன்போகம் நிலைக்குமென வெண்ணிவளர்த் திவ்வுடலை
யெமனுக் களிக்குங்குறையோ
ஏமார்ந்த வனைப்பருந் தெடுத்துபோங் கதையுலகோ
ரேய்க்கமதி கெட்டகுறையோ
இன்போத மிங்கேது யீடெனூஉங் கடல்விட்டு
யேராத பெரியகுறையோ
எருதுநோய்க் காகமறியாது குத்துதல் தன்பசி
யெனத்தாங்கி யிளைத்தகுறையோ
வன்போக மாறுட்டச் செயனீங்கி யுனதுகழன்
வணங்கிலா குறைதீர்த்தருள்

வானவர்க டொழுங்கயிலைத் தானிதெனுந் திருமயிலை
வள்ளலே கபாலீசனே. (எ)

---

## பார்வையின்பயனைப் பயன்படு மொழிவுரை.

### வெண்செந்துறை.

தேர்நிறை மயிலைவாழ் தெய்வீக சின்மயா
நூர்நிறை யுலகினிற் றுகளுனே னெளியேன்
பார்நிறை வாழ்க்கையின் பார்வைமுன் பயனிலே
னேர்நிறை யெழில்பத மெண்ணியே யிறைஞ்சுதல்.

### பன்னிருசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

---

நலமிகும் பரமனே நாதனே விநோதனே
நவிலரிய சூட்சவடிவே
ஞானமுட ஞேயமலி சாட்சிய விபூதனே
கங்கையுமை மங்கைமகிழுந்
திலகனேசங் காரசிவா னந்தமஹேசச் சுரனேயன்பர்த்
தேடிசதா பாடிநாடுந்
தெய்வீக வியூகமே சிறியன்மனந் தெரிந்து துணைச்
செய்பவர்க ளுளரோவுரையாய்
புலனவிழ வருமிடிக ளவைத்தொடரா நிலையருளிற்
புண்ணியனே பிழைப்பேனேழை
பூத்துதிரு மலரெனவே புன்புலா லியாக்கையினூட்
போக்கினேன் வாழ்க்கைமலியும்
உலகபார் வைக்கெளியே னெனினுமுன் றருள்விழிமு
னுதிபேனெவ் வணமோவுரையா
யுயர்நேச விசுவாச கயிலையா மயிலைவாச
வோம்சிவ கபாலீசனே. (க)

அலகிலாப் புகழ்தங்கு மகிலேசனே சத்தி
யம்பிகா பதியெனவரு
மாரணா காரணா பூரணா னந்தனே
வாப்தரிரு தயவுலாசா

விலகரிய மாயபடு குழியிவிழிந் தலைவதுமுன்
விதியோ? யலதறிவின்சதியோ?
வேதவிற் பனர்கண்முதற் சாதனைகர்த் தர்களுமிவை
வேண்டாது தாண்டிநின்றார்
கலகமிகு புலனலகை குலவியென்றே டுலவியிடு
காட்டினில்விட் டாட்டிவோட்டக்
கயவனுள னைந்ததுவு நயவஞ்சக முந்தினதுங்
கங்கைவே ணியனேமறைவோ?
உலகபார்வைக் கெளியே னெனினுமுன தருள்விழிமு
ஞெதியேனெவ் வணமோவுரையா
யுயர்நேச விசுவாச கயிலையா மயிலைவாச
வோம்சிவ கபாலீசனே. (௨)

பலவடிவா யெழுந்தருளி யநுக்ரஹஞ் செய்தபரா
பரனேதயா பரனேஹரனே
பகிரதியி லுற்றவால விடமதனை யமுதமெனப்
பருகிதேவ ரின்னடர்த்த
நலமுணர்ந்து னரியபதஞ் சேவைசெயு மன்பிலா
நாயினேனெங் ஙனமுய்குவேன்
நாதநா தாந்தசிவ போதமே போதாந்தமதி
னடனமிடுஉ மதுலிதனே
சலனடுவிற் புணையொடியத் துணையிலான் மாய்வதுநிகர்
சாற்றகிலாக் கொன்னனடுவிற்
சகடையுட னிடிபடுஉங் கொடியனிடர் கெடவிழிசாய்
தமியனுக்கிங் கிலையாதரவே
உலகபார்வைக் கெளியே னெனினுமுன தருள்விழிமு
ஞெதியேனெவ் வணமோவுரையா
யுயர்நேச விசுவாச கயிலையா மயிலைவாச
வோம்சிவ கபாலீசனே. (௩)

இலவங்காத் திடுங்கிள்ளை யொருசிறிதும் பயனடையா
தேங்குவதற் போலவெளியே
னென்னுளுஞ் சின்னகுண மன்னவதி னன்மையிலா
திடரடைய வருந்திநின்று
அலகையெனப் புலநுழையா முழையிலிறங் கினனந்தோ?
அண்ணலே நினக்குமறைவோ?

அதிகவித ரண்முடைய ஆதிபரவுந் தொழும்பர்சதா
வர்ச்சனைச்செய் திருமுதல்வனே
நிலைபோலசைய யாமனத டங்கியொடுங் கியேநிட்லை
செறிந்துவதி யினிலுனதரு
தெய்வலட் சணசுஜன சுந்தரசோ பிதங்கண்டு
சேவைசெயும் வரமருளுவாய்
உலகபார்வைக் கெளியேனெனினுமுன தருள்விழிமு
ஞெதியேனெவ் வணமோவுரையா
யுயர்நேச விசுவாச கயிலையா மயிலைவாச
வோம்சிவ கபாலீசனே. (௪)

கலைகண்டு நிலைவிண்டு வுனையண்டு மனத்தொண்டு
கடாட்சிக்கிற் பிறவிவருமோ?
கண்கட்டி காட்டில்விட் டோட்டுவரைப் போல்வினைக்
கன்மத்திற் சிக்கியுண்ட
இலையைப்பின் வேண்டாது நீக்குவனே ரேழையே
னிறந்தமுடி வினிலடைவதெ
னெவருளா ரெனதுவிதி கதிமதியு மறிந்துநல
மீந்திடுவ ரொருமொழிசொலாய்
வலைபட்ட சீவனென வாடுவதினுந் தனிசீர்
வாய்க்கசெய் வதுமலையதோ?
மலைவுற்று கொண்டசுக மதுபோதும் விண்டதுனி
வசனிக்கி லேற்பவரெவர்
உலகபார்வைக் கெளியேனெனினுமுன தருள்விழிமு
ஞெதியேனெவ் வணமோவுரையா
யுயர்நேச விசுவாச கயிலையா மயிலைவாச
வோம்சிவ கபாலீசனே. (௫)

உலையின்மெழு காயுருக வுற்பாத பிண்டமுமாய்
ஓகோ! யெனை யமைத்ததென்கொல்?
உற்றவருங் கற்றவருஞ் சுற்றியுள் மற்றவைக
ளொருசிறிதும் வேண்டிலாது
தலைப்பட்ட செயலெல்லாந் தணலிற்பட் டெரிபஞ்சாய்த்
தானான துண்மையன்றோ?
தற்சுதந் தரமெலாம் பிற்சுதந் தரமிலைச்
சத்தியமிதைத் தடுப்பரெவர்காண்

கொலைப்பட்ட பின்புசிரங் கூத்தாடி பாடுமெனிற்
கோரணிவித் தையுஞ்சாலமாங்
குணமெனக் கொள்வரோ? கூடுமுயிர் சருவத்துங்
குடிகொண்ட ஞானதுரையே
உலகபார் வைக்கெளியே னெனினுமுன தருள்விழிமு
ழுதியேனெவ் வணமோவுரையா
யுயர்நேச விச்வாச கயிலையா மயிலைவாச
வோம்சிவ கபாலீசனே. (௬)

விலையிலா தப்பொருளே வித்திலா விளைப்பயிரே
விஞ்சையர்க ளுண் ணுங்கனியே
விமலகுண திதவடிவே வெகுபாடு பட்டமுன்னோர்
விளம்பியெழுதிய நூன்மறையே
அலையடங்கிற் றலைமுழுக நினைவான்போ லனித்தியமிகு
வாசாபாசந் தொலைகிலா
தந்தகா ரத்தினடு வுண்டுறங்கிக் கால
மனைத்தையுஞ் சூரையாடி
விலைப்படா புழுவுடலை மெய்யென் றினைத்தலது
விதியோவின் சதியோவறியேன்
வீணரவாரமதன் விழியனல்முன் பனியன்றோ?
வெகுவாகச் சொலவேண்டியதோ?
உலகப்பார் வைக்கெளியே னெனினுமுன் தருள்விழிமு
வொதியேனெவ் வணமோவுரையா
யுயர்நேச விசுவாச கயிலையா மயிலைவாச
வோம்சிவ கபாலீசனே. (எ)

கலகல்த்த சருகெனினு மனல்பூர்க்க வுதவியெனக்
கருதிதேடுத லனுபவங்
கனகமோ கழுத்தரியுங் கனந்தருகு முயிர்மீட்குங்
கலந்துண் ணுங் கைவிடுமோர்கால்
பலந்தருகுங் கண்மறையும் பாம்புபோற் பதுங்கிடும்பல்
பட்டவுடன் பிழைப்பதரிதாம்
பாரெலாஞ் சுற்றமென வுறவாடிக் கொண்டிடும்
பார்த்தோரெலாம் பணிபுரிகுவர்
சலசலப்புக் கொருநாளும் பனங்காட்டு நரியஞ்சுமோ
சாக்காட்டைத் தடுக்கமுடியா

சாந்தமெனுந் தெய்வத்தைச் சார்ந்திடினே யிவைபலவுஞ்
சங்கையும் வெறுப்புடையதாம்
உலகயார்வைக் கெளியே னெனினுமுன தருள்விழிமு
ஞறியேனெவ் வணமோவுரையா
யுயர்நேச விசுவாச கயிலையா மயிலைவாச
வோம்சிவ கபாலீசனே. (அ)

---

## சணனவேட்கையின் சலிப்பெடுத்துவப்புறல்.

### வெண்செந்துறை.

அறந்தழைத் தவரெலா மன்புமருட் பெற்று
சிறந்தநின் ஞருகண்டு சேர்ந்தொன்றாய்க் கலந்தனர்
மறந்தழை யேழையேன் வையகத் திறக்க
பிறந்து வுழன்றதைப் பெரிதுணர்ந் திறைஞ்சுதல்.

---

### அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

திருவருட் செல்வமேமெய்த் திகழ்பவா செக்கர்வேணி
கருணையங் கடவுளேநற் கதிதருஞ் சிவபிரானே
இருவினை யற்றோரேத்தும் ஸ்ரீகபா லீசதேவே
மருளனேன் வினைத்தடிந்து மாய்ந்திடப் பிறந்தவாறே. (க)

அதிவித ரணதவத்தோ ரருகிருந் தஞ்சலித்து
மதியுடன் கதியும்பெற்றார் வஞ்சனேன் மாயையாகுஞ்
சதியுடன் பதியாய்வாழ்ந்து சதுர்புரு ஷார்த்தமற்று
விதியென பிறப்பதற்கு வீணனியான் பிறந்தவாறே. (உ)

கண்படும் பொருட்களாலே கலக்கமு கிந்தைசன்மம்
புண்படும் புழுக்குரம்பைப் பொத்தலை வாசமூட்டி
விண்படும் விசும்பிலாமல் மெலிந்திடும் பயிர்போல்வாடி
மண்படுஞ் சுமைச்சுமந்து மறைந்திடப் பிறந்தவாறே. (ங)

அனித்திய தேகமென்பே னனர்த்தஞ்செய் வதிற்சிரேஷ்டன்
கனியைப்போல் வார்த்தைசொல்லிக் காஞ்சிரங் காய்கொடுக்கு
மனியாயச் செயலுஞ்சிந்தைக் காளென வுழன்றுயிரை
வினியோக மறலிக்காக வினையுளேன் பிறந்தவாறே. (ச)

உடலது பிலக்கவேண்டி வுயிரெலாங் கொன்றுத்தின்று
யிடர்பலப் புரிந்துகொண்ட வெண்ணம்போ னடந்துக்கெட்டு
மடமையால் வலிதுபேசி வாய்ஞானி யெனத்திரிந்து
நடலைவாழ் வதிலிறக்க நாயினேன் பிறந்தவாறே. (ரு)

கண்ணினு ளொளியைப்போலுங் கனியினுண் மதுரம்போலும்
பண்ணினி லிசையைப்போலும் பாலினிற் சுவையைப்போலும்
எண்ணினி லெழுத்துநீயென் றியம்புவேன் றீமைதன்னிற்
றிண்ணியன் மண்ணுட்புக்கச் செடியனியான் பிறந்தவாறே.

மூச்சகக் கட்டிலாக மூக்குணம் படையலாக
இச்சைகட் பூசையாக விருதயங் கோயிலாக
சொச்சொரூபமாஞ்சிவன் றூபமாய்த் தந்தார்முன்னோர்
மச்சுவீ டிடிந்துச்சாக மமைதையேன் பிறந்தவாறே. (எ)

மருந்துக்கும் வணக்கஞ்சத்தியம் வாஞ்சிக்கேன் மாயமின்னும்
பொருளுளா ரவர்க்கேவாழ்க்கைப் பொருந்திடு மில்லான்றன்னை
ஒருவீடு மூலகமியாவு மோகோகண் பார்க்கசெத்துப்
பெருமையற் றொழியவீணே பேயனியான் பிறந்தவாறே. (அ)

தேகவா லயத்திலுள்ள திரவியங் களவுசெய்ய
பாகமா யுளவுக்கண்டுப் பற்றியே மறைவான்போல
சாகர வேட்கைசீவன் றனைச்சண்டன் கொள்ளையாட
பாகங்கொண் டிறந்துமண்ணுட் புதுங்குமியான் பிறந்தவாறே. (கூ)

ஏழையி னுருவம்வார்த்தை யேற்பவ ரொருவர்க்காணேன்
வாழைபோல் மாயகன்மம் வளர்ந்தது யினியென்கேண்மை
கோழையே னனுபவித்த கோதினுக் களவிங்குண்டோ
பீழையில் மறைந்திறக்கப் பேயனியான் பிறந்தவாறே. (ய)

பார்வையிற் சிறியசென்மம் பழிபாவ நிறைந்தத்தீயன்
ஏர்வையில் லாதபூசை யெவர்க்கும்வேண் டாதக்கூற்றன்
கோர்வைபோற் சேர்ந்தோரெல்லாங் குறைசொலி நீங்குமாயப்
போர்வையால் மயக்கிமாயும் புலையனியான் பிறந்தவாறே. (கக)

உள்ளதை மறைத்துமூடி[வுப்புளப் பாண்டந் தன்னுட்
கள்ளமுங் கபடுவஞ்சக் காட்டினிற் றுள்ளியாடிச்
கள்ளையிற் றலைவணங்கிச் சகலமும் வெறுக்கமண்ணிற்
றள்ளிட மறைந்துசசாகுஞ் முக்கனியான் பிறந்தவாறே. (கஉ)

வானவர்க் கரசேஞான வத்துவே சித்தனைத்துந்
தானவர்க் கதுக்ரஹிக்குஞ் சம்போசங் கரமாதேவா
ஊனதைக் கொழுக்கவைத்து வொருபல னிறுதிக்காணு
ஈனனே னிவண்விட்டேகி யெடுபட பிறந்தவாறே. (கங)

தலைதெரி யாதுகட்டந் தனைச்செய்து வினைப்பூச்சாகி
மலைவுகொண் டனித்தியபோக வாழ்வினில் மயங்கிக்கெட்டேன்
கலையெலாந் தெரிந்ததென்பேன் காலன்வந் தணுகும்வேளை
உலைபடு மெழுகதாக வொதியனேன் பிறந்தவாறே. (கச)

தத்துவப் பொத்தலூடே சாத்திர வொழுக்கதாக
மத்திபச் சிந்தைநீங்கா வலியெலிப் பூனைவாயுண்
மெத்தவுந் திகிலால்மாயும் விதமுலகமதின் சாக்காட்
டித்ததி தணியாதோய்ந்து யிறந்திடப் பிறந்தவாறே. (கரு)

ஆடினு ராடிப்பாடி வளர்ந்தன ருயர்ந்தோர்த்தாமுந்
தேடினு ருனதுப்பூந்தா டிருவருட் கலந்துநின்றார்
கூடினார்த் தொழும்பரெல்லாங் கும்பிட்டார் நலமும்பெற்றார்
வாடியே மரிப்பதற்கு வஞ்சனேன் பிறந்தவாறே. (கசு)

அறிவுளோர் ஞானப்பாலை யருந்திநின் னருகேவாழ்ந்தார்
குறிகுண மொன்றுமில்லாக் கோவேதே வர்க்குதேவே
நெறியிலா நீசனெங்கு னிலைப்பனோ நிலைத்தற்கில்லா
வெறியனே னயர்ந்துமாள வெகுண்டநேர்ப் பிறந்தவாறே. (கஎ)

சொல்லவோ நாவுமில்லைத் தூங்கவோர் நிலையுமில்லை
வெல்லவோ மதியுமில்லை வினையற பக்தியில்லை
கல்வினு ணுருரிக்குங் கதைசொலிக் காலம்போக்கி
நெல்லக லுமிபோலாக நெடுகேநான் பிறந்தவாறே. (கஅ)

அன்னியஞ் சொந்தமென்பே னுசையும் பூசையென்பேன்
மன்னனு யகந்தைச்செங்கோல் வழங்கியே மலைத்துப்பொய்யா
லென்னென்னே வித்தைக்காட்டி யேய்த்தன னுலகையெல்லாம்
பன்னக விடத்தால்மாயும் பாவிநான் பிறந்தவாறே. (ககூ)

அரஹர நமசிவாய! அடைக்கல முனதுப்பாதம்
வரந்தந்தாற் பிழைப்பேனன்றி வாழ்வெல்லாம் மண்ணதாமால்
பரமனே சிவபிரானே பரதேசிசொலுஞ் வியூகஞ்
சரணதி லணிந்திலையேற சாகநான் பிறந்தவாறே. (உ0)

---*

## கடைத்தேறவேண்டுங் கழனினைப்பதிகம்.

—o—

வெண்செந்துறை.

படைக்கல மிருக்கினும் பழவினைப் படியிக்
குடைக்கலஞ் சுமந்துயி ரொழிவது வுண்மையா
லடைக்கலந் தந்திடி லடியவன் பிழைப்பனால்
கடைத்தேற வேண்டுங் கழனினைத் தேத்துதல்.

எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

பண் – இந்தளம்.

சீர்நிறை சிவபிரானே திருவெண்ணீற் றொளியினனே
சிந்திப்பார் சிந்தைதன்னு டிகழ்பவா தேவதேவே
தார்நிறை மார்பினனே சசிமௌலிச் சடையினனே
சங்கரா ஸ்வயம்ப்ரகாசா சச்சிதா னந்தமூர்த்தி
பார்நிறை வடிவமெல்லாம் பற்றிய நாமரூபா
பன்னிரு கலையுணட்டம் பயின்றிடும் பரமநாதா
ஏர்நிறை மயிலைகபா லீசனே கடைக்கண்சாய்த்தா
லேழையேன் பிழைத்துப்போவேனி துவுண்மை யெம்பிரானே (க)

கருணையங் கடவுளேநின் கண்முனம் மறைவொன்றுண்டோ ?
காலமே காலனாகக் கலந்தெனைக் கவர்ந்துகொல்ல
ஒருவருந் துணையில்லாது வுலுத்தனே னொதியேனந்தோ
வுரைத்திடற் கியலாவண்ண மூடவினைத் தறிவிழந்துப்
பெரும்பய னென்றுமின்றிப் பேய்மயல் பிடித்திங்காட்டப்
பேதையேன் றவித்தனன்றோ ? பிரமனின் சிரங்கையேந்தி
யெருதேறி வருகுங்கபா லீசனே கடைக்கண்சாய்த்தா
லேழையேன் பிழைத்துப்போவே னிதுவுண்மை யெம்பிரானே. ()

சங்கரா சமயாதீத சமயமாஞ் சைவமன்னுஞ்
சம்புவே சகஸ்ற்றிநாமா சந்திரனக் கினியுஞ்சூர்யன்
தங்குமுக் கண்கனாகத் தான்விளங் கிடுபெம்மானே
தற்பரா சருவசீவர்த் தனக்குளே நிறைந்துள்ளானே
புங்கவ ருள்ளமோங்கும் புனிதனே தனிப்பிழம்பே
பொய்யுட லெனகணித்தோர்ப் பொய்யுமெய் யிரண்டும்வேண்டா

செங்குமீ யாகுங்கபா லீசனே கடைக்கண் சாய்த்தா
லேழையேன்பிழைத்துப்போவே னிதுவுண்மை யெம்பிரானே (௩)

ஒப்புயர் வதுயில்லானே வுயிரென மறைந்துளானே
வுடலைவிட் டகலாவோர்சொ லுளவதை புணர்த்தனன்றே
முப்பகை யாளராலே மூண்டது கொடியதுன்பம்
முழுதுணர்ந் தவர்கடானு முன்னறிந் தின்னலற்றார்
அப்பப்பா போதும்போது மடிமையை வதைத்தல்வேண்டா
மனுபவித் ததனுலன்று ளண்டினேன் றெண்டுசெய்யே
னெப்படி பொறுப்பாய்கபா லீசனே கடைக்கண்சாய்த்தா
லேழையேன் பிழைத்துப்போவே னிதுவுண்மை யெம்பிரானே (௪)

கன்னலங் கனியிருக்க காஞ்சிரங் காயையுண்டக்
கடையவ னென்போலெங்குங் கண்டிலேன் விண்டதுண்மைப்
பன்னகா பரணனேமெய்ப் பரமனே சிவபிரானே
பவமதா லுள்ளநைந்துப் படுந்துயர் பார்ப்பதென்கொல்?
அன்னையின் கருவிற்றூனே யழித்திடா திருந்ததென்னே?
அங்ஙன மொழிந்தேனுன லையகோ வபத்தமில்லை
என்செய்வ தறியேன்கபா லீசனே கடைக்கண்சாய்த்தா
லேழையேன்பிழைத்துப்போவே னிதுவுண்மை யெம்பிரானே. (௫)

கடிந்திடும் பார்வைமுன்னங் கடையவ னெங்ஙனுய்வேன்
கற்றைவார்ச் சடையினானே கருத்தினை யறிந்துள்ளானே
படிந்திடு மாயப்போர்வைப் பகட்டிலே யழிந்துநொந்தப்
பாவியேன் கூவிகூவிப் பறைந்திடு மொழிகேட்காயோ?
ஒடிந்திடுங் கொம்புபோல வொழியுமோ பழிகளெல்லா
மோய்ந்தொரு மூலைதன்னி லுட்காராப் படிமண்கோட்டை
யிடிந்திடி னன்றோ? கபாலீசனே கடைக்கண்சாய்த்தா
லேழையேன் பிழைத்துப்போவேனிதுவுண்மையெம்பிரானே (௬)

அத்தனே யமரரேறே யகண்டலட் சணபெம்மானே
அகிலலோ சனனேஞான வமலனே பரமநாதா
சித்தமுன் னிடம்வைத்தார்க டீவினைக் கடல்கடந்தார்ச்
செடியவன் செய்ததோஷச் சிரந்தனை நசித்தலெங்நான்
பத்திசே ருத்தமருட் பலித்திடு மணிவிளக்கே
பச்சைவை ரேயமேசெம் பருதிமா மரகதமே
இத்தரி யாளுங்கபா லீசனே கடைக்கண்சாய்த்தா
லேழையேன் பிழைத்துப்போவேனிதுவுண்மையெம்பிரானே. (௭)

பட்டனன் கோடாக்கோடி பழுத்திடு கனிவிழும்போல்
பலித்திடு முன்னமுன்றுட் பாவியேன் பற்றுவேனே?
நட்டனன் கோடாக்கோடி நலந்தரா சாவியாக
நாயினுங் கடையாய்நின்று நங்குற்றேன் நட்டந்தானே
தொட்டனன் கோடாக்கோடித் தொடுத்தவைக் கெடுக்கக்கண்டேன்
தூரமா யொழியவென்று டொடருமென் றஞ்சிநின்றே
னிட்டதுன் விதியோ? கபாலீசனே கடைக்கண்சாய்த்தா
லேழையேன் பிழைத்துப்போவே னிதுவுண்மையெம்பிரானே. (அ)

தொல்லையா மல்லல்விட்டத் தூயர்க ளுனைக்கலந்தார்
துஞ்சிடப் பிறந்தேனல்லாற் றுகளகன் றில்லேன்மாய
வெல்லையில் மயங்கிக்கெட்ட யின்னலை யகற்றலெங்கா
னியம்பிட வேண்டிநின்ற தெங்ஙனீ யறிந்ததன்றோ?
கல்லினும் வலியதானக் கரணநோய் தனைப்போக்காமற்
காணுமோ ஞானவீடு கடக்குமோ சனனவாதை
யெல்லாமுன் செயலேகபா லீசனே கடைக்கண்சாய்த்தா
லேழையேன் பிழைத்துப்போவே னிதுவுண்மையெம்பிரானே. (க)

மறைசுரு திகளுக்கெட்டா வள்ளலே மகத்வதேவே
மாதவப் படியல்லாமன் வாய்ப்பது வரிதென்பார்கள்
கறையுடைக் கண்டனேமுக் கண்ணனே கருணையானே
கனகமா வரையேயின்பக் கடலேசாஸ் விதபெம்மானே
பிறைநிறைச் சடையினனே பேசுதற் கரியநாதா
பிரமனின் சிரங்கைக்கொண்டப் பெருந்தகையானேதொண்டர்க்
கிறைவனேதெய் வீககபா லீசனே கடைக்கண்சாய்த்தா
லேழையேன் பிழைத்துப்போவே னிதுவுண்மை யெம்பிரானே (ம)

---

## வரந்தரும்பரமனே பரதேசிக் கிதங்குமெனல்.

---

### வெண்செந்துறை.

சரணடைந் தவருளே தாண்டவஞ் செயுமம்
ஹரஹர சிவசிவா வத்தனே சித்தம்போல்
வரந்தரும் பரமனே வள்ளலே யேழைப்
பரதேசிக் கிதங்கிசீர்ப் பணியெனப் பணிதல்.

## அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

---*---

அரனே ஹரஹரனே ஞானவமலா சருவவிமலா
காமீதயன் சிரமேந்துங் கபாலீச்சுர தேவே
வரம்பெற்றிடும் பணிசெய்திலா வஞ்சன்பிழைப் பொறுத்து
பரனே நலமருடந்துயிப் பரதேசிக் கிரங்குவையே. (க)

கண்ணுமத னொளியாயனைத்துட் கலந்தே விளையாடும்
அண்ணுமென தப்பா வகண்டிதனே சதுர்ப்புஜனே
புண்ணும்வினை யதனுலுளம் பொங்கித்துய ரடைந்தேன்
பண்ணுந்தமி ழுருவேயிப் பரதேசிக் கிரங்குவையே. (உ)

எல்லாமுன தருளன்றிவே றெண்ணேன் றுதிப் பண்ணேன்
சல்லாத்துணி குளிர்த்தாங்கிடாத் தன்மையிவ ணயர்ந்தேன்
மல்லாடிடு முப்பேயினுல் வாடினைந்தே னெளியேன்
பல்லோர்தொழுஞ் சிவமேயிப் பரதேசிக் கிரங்குவையே. (௩)

கடின மன துடையேன் பொல்லாக் கனவஞ்சகப்புலையேன்
நடின பொம்மைப்போலப்பொய்யைநாட்டிசேட்டைப்புரிந்தேன்
கொடிதுமெண்ணங்கொடி துடைக்கொடி துமெல்லாங்கொடிது
படிமீதெல்லாம் பொறுத்தேயிப் பரதேசிக் கிரங்குவையே (ச)

வேர்த்துவுள்ளம் வெகுண்டுவினை வேர்க்கொண்டிவண் டழைத்துஞ்
சேர்த்துமாய வலையான்மிகத் திகைத்தே னியாவும்பகைத்தேன்
நீர்த்திரைப்போ லொழியுங்சன்ம நீசன்குறை தவிர்த்தாள்
பார்த்தோர்பார்வைக்கெளியேனிப் பரதேசிக் கிரங்குவையே. (ரு)

கருணாகரப் பொருளேசைவக் கனியே கனியின்சுவையே
பெருமானேநின் புகழைப்பேச பேயேனென்னத் தெரிவேன்
அருளே யெல்லாமாகி தழைப்பவனே பிழைப் பொறுத்தாள்
பருதியென நிறைவோயிப் பரதேசிக் கிரங்குவையே. (சு)

சொல்லாமாயச் சகடைதன்னுற் றெல்லைப் புணரியிலே
அல்லோலகல் லோலமென வாடியலைக் கழுங்கிப்
பொல்லாதவ னெனப்பேரிவண் பொருந்தின துன்மையலோ ?
பல்லையுகுத் தவனேயிப் பரதேசிக் கிரங்குவையே. (எ)

தொழுகேன் றெழுதவரைத்தொடர்ந்தில்லேன் வினையுடையேன்
அழுவேனொரு வேளையவை யகல்வே னகங்கரிப்பேன்
மழுமான் கொன்றைச்சடையா யேழைவழுத்துமாலை யணிந்துப்
பழுதின்றிய நிலைதந்துயிப் பரதேசிக் கிரங்குவையே. (அ)

### இதுவுமது.

மாமணியே மாணிக்கமே வைடூர்ய மரகதமே
தேமணியே திருவருளே தேடரியப் பொன்மலையே
பூமணியே பொக்கிஷமே புலையனியான் சொலுமாலைப்
பாமணியே யணிந்தருடா பதஞ்சரண மஹேச்சுரனே. (௧)

கண்மணியே கண்ணொளியே கருணைநிறைப் பரஞ்சுடரே
விண்மணியே வுயிர்ப்பயிர்கள் விளைவரு முயர்விசும்பே
தண்மணியே சங்கரனே தமியேனியான் சொலுமாலைப்
பண்மணியே யணிந்தருடா பதஞ்சரண மஹேச்சுரனே. (௨)

நிறைமணியே நிதிமணியே நித்தியாப ரோட்சிதமெய்
மறைமணியே சிவசமயம் வளர்மணியே மகத்துவமணியே
பிறைமணியே சின்மயனே பேயனியான் பவந்துடைக்கப்
பறைமணியே யணிந்தருடா பதஞ்சரண மஹேச்சுரனே. (௩)

திணிமணியே தெய்வீகச் செழுமணியே சிந்தையினுட்
குணிமணியே குணமணியே குற்றமற்ற நீண்டாமணியே
மணிமணியே மாதவமில் வஞ்சனியான் மாலைசொலிப்
பணிமணியே யணிந்தருடா பதஞ்சரண மஹேச்சுரனே. (௪)

நிதிமணியே நிலைமணியே நெஞ்சிலுள வஞ்சமற்றோர்த்
துதிமணியே சுயமணியே சுகபஞ்சாக் கரமணியே
மதிமணியே வணங்கிசதா வரம்பெறவே மகிழ்சொல்லும்
பதிமணியே யணிந்தருடா பதஞ்சரண மஹேச்சுரனே. (௫)

### சத்தசரண இந்தளம்.

அருளே சரண மணியே சரண மகண்டிதமெய்ப்
பொருளே சரணம் புனிதா சரணம் புத்தமிழ்தே
தெருளே சரணஞ் சிவமே சரணஞ் சேவைசெயார்க்
கிருளே சரணம் ஸ்ரீகபா லீசநின் சரண்சரணே. (௧)

மறையே சரண மகத்தே சரண மனோகரமே
பிறையே சரணம் பெரியோய் சரணம் பிஞ்ஞகமெய்
நிறையே சரணம் நிமலா சரணம் நிலவணியு
மிறையே சரணம் ஸ்ரீகபா லீசநின் சரண்சரணே. (௨)

பதியே சரணம் பரமே சரணம் பரஞ்சுடரே
மதியே சரணம் வள்ளலே சரணம் வாழ்த்தினரின்
றுதியே சரணம் ஸ்வயம்பே சரணந் துகளில்லா
யிதமே சரணம் ஸ்ரீகபா லீசநின் சரண்சரணே. (௩)

கழியே சரணந் துணையே சரணந் துயர்களுநர்
விழியே சரணம் வித்தே சரணம் விஞ்சையற்றோர்ப்
பழியே சரணம் பாதுவே சரணம் பகரரிய
யெழிலே சரணம் ஸ்ரீகபா லீசநின் சரண்சரணே. (௪)

கண்ணே சரணங் கருத்தே சரணங் கதியடைந்தா
ரண்ணே சரண மறிவே சரண மாப்தர்தொழும்
பண்ணே சரணம் பயனே சரணம் பகரும்பல
எண்ணே சரணம் ஸ்ரீகபா லீசநின் சரண்சரணே. (௫)

சுந்தரா சரணஞ் சோதியே சரணந் துயடீர்க்கும்
மந்திரா சரணம் மாசிலா சரணம் வழுத்திலர்க்கு
தந்திரா சரணஞ் சங்கரா சரணஞ் சருவமந்திர
யெந்திரா சரணம் ஸ்ரீ கபா லீசநின் சரண்சரணே. (௬)

போகனே சரணம் போகமே சரணம் புந்திநைந்தார்த்
தியாகனே சரணந் தினகரா சரணஞ் சின்மயாநன்
வாகனே சரணம் வத்துவே சரணம் மாசில்லா
ஏகனே சரணம் ஸ்ரீகபா லீசநின் சரண்சரணே. (௭)

—(✱)—

## வாழி விருத்தம்.

ஓங்காரப் பிரணவன் கபாலீசனென்கழ லுமையெனுங்கற்பகவல்லித்தாய்
ஓதரிய முருகன் வள்ளிதெய்வ யானைகண முயர்வேலுஞ்சேவல்மயிலும்
பாங்குடையசிவசமயப்பயிரெங்கும் விளைந்திடப்பண்புடனிங் கவதரித்துப்
பகரருமற் புதஞ்செய்த கந்தன்சம்பந்தபிரான்பணிசூழ்திரு நாவுக்கரசர்
நீங்கரிய சுந்தரர் மாணிக்கவாசகர் நிகரில்திருத் தொகைசொல்லடியர்
நித்தியரப ரோட்சமாந் திருநீறு ருத்ராக்கம் நியமதிருப் பணிசெல்வருந்
தாங்கும்புகழ்மலிமிந்நூற்குதவியச்சியற்றிய தின்வாராம்ஸங்கண்டுநிலையை
சார்ந்தவரு மெய்ப்புலவர் பக்திநே ரன்பர்களுஞ் சந்ததம் வாழிநலனே.

---

சிவஞான பாஸியவியூகம் முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

23:38-2M
182553





